விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 165 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 19 சனிக்கிழமை (01.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.03,
2ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


## உயர்தரப் பெறுபேறு
## யாழ்.இந்து - 56 ‘3ஏ’
## யாழ்.வேம்படி - 30 ‘3ஏ’

(யாழ்ப்பாணம்)

வெளிவந்த 2023ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் 56 மாணவர்கள் மூன்று பாடங்களிலும் "ஏ" தரசித்தியை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இவர்களில் 26 மாணவர்கள் கணிதப் பிரிவிலும் (பௌதிக விஞ்ஞானம்), 23 மாணவர்கள் உயிரியல் பிரிவிலும் 5

15

## வடக்கில் மாவட்ட ரீதியில் சிறந்த பெறுபேறு பெற்றவர்கள்






15

# அதிகாரப் பகிர்வு வடக்குக்கு அவசியம்

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி



*(கொழும்பு)*

வடக்குக் கிழக்கு மாகாணத்துக்கு அதிகாரப் பகிர்வு மற்றும் அபிவிருத்தி அவசியம் எனத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, புலம்பெயர் தமிழர்கள் அரசியல் நிரலைப் பின்பற்றுவதை தவிர்க்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளார். *(15ஆம் பக்கம் பார்க்க)*

## க.பொ.த உயர்தர பெறுபேறு வெளியாகின

(கொழும்பு)

2023ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு நேற்று வெளியாகியுள்ளது.

குறித்த பெறுபேறுகளினை https://www.doenets.lk/examresults என்ற பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளப் பக்கத்தில் தமது தகவல்களை உள்ளீடு செய்வதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

15

## 1,73,444 பேர் பல்கலை நுழைவுக்குத் தகுதி

(கொழும்பு)

2023ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகின.

2023ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய 269,613 பரீட்சார்த்திகளில் 173,444 பேர் (64.33%) பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமையுடையவர்கள் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

(ம-7,10)

## மீசாலை வீரசிங்கம் மாணவன் யாழில் கணிதப் பிரிவில் முதலிடம் கலைப்பிரிவில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை மாணவி முதலிடம்



(யாழ்ப்பாணம்)

வெளிவந்த 2023 ஆம் ஆண்டுக் கான க.பொ.த உயர்தரப் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் கணிதப் பிரிவில் (பௌதிக விஞ்ஞானம்) தென்மராட்சி மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி மாண

15



## க.பொ.த உயர்தரப் பரீட்சையில் தேசிய ரீதியில் முதலிடம் பிடித்த மாணவர்கள்

(கொழும்பு)

2023 ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்ட நிலையில், பெறுபேறுகளுக்கு அமைய ஒவ்வொரு பாடப் பிரிவின் அடிப்படையில் நாடளாவிய ரீதியில் முதலாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளன.

அதன்படி, உயிரியல் பிரி

15




## நல்லூரடியில் வாள்வெட்டு; ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நல்லூரடியில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நல்லூர் பின் வீதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குடித்துக் கொண்டிருந்த இளைஞர் குழுவினரை அங்கிருந்து அகலுமாறு வாள்வெட்டுக்கு இலக்கானவர் எச்சரித்துள்ளார்.

இதனையடுத்து குறித்த நபர் மீது வாள்வெட்டுக் குழு தாக்குதல் நடத்தியுள்ளது.

இது தொடர்பில் கோப்பாய் பொலி

15

## எரிபொருட்களின் விலை குறைப்பு

(கொழும்பு)

நள்ளிரவு முதல் அமுலாகும் வகையில் எரிபொருள் விலையில் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒக்டேன் 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 13 ரூபாயினால் குறைக்கப்படவுள்ளது.

ஒக்டேன் 92 ரக

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
04 - 02 - 1954



மறைவு
30 - 05 - 2024

## மோகனதாஸ் நாகலோஜினி

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட மோகனதாஸ் நாகலோஜினி நேற்று முன்தினம் (30.05.2024) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - இராசலட்சுமி தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற கந்தசாமி மோகனதாஸ் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - இராசமணி தம்பதியினரின் மருமகளும் சதீஸ், பிரதீஸ் (ஜேர்மனி), வாகீஸ்(ஜேர்மனி), திலீபா(லண்டன்), சோபியா (லண்டன்), கஜிதா(லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற நாகேஸ்வரன், ஞானேஸ்வரி(பிரான்ஸ்), குமுதினி, சுரேந்திரன் (பிரான்ஸ்), காலஞ்சென்ற உஷந்தன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற தர்மரத்தினம், காலஞ்சென்ற மன்மதராசா, விஜயகுமாரி (ஜேர்மனி), ஜெயக்குமாரி, சூரியகுமாரி(ஜேர்மனி), ராஜினி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் யசோதா, நீனா(ஜேர்மனி), கிருஷாந்தினி (ஜேர்மனி), ஜெகன்(லண்டன்), கஜேந்திரன்(லண்டன்), சஞ்சயன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அஷ்மியா, அகிபன், சதுர்ஷா, ஜனேஸ், மோரிஸ், விஹான், விஹாசினி, வருண், அஷாஜினி, இவனியா, ஆரிஷ், அக்ஷனா ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (03.06.2024) திங்கட்கிழமை மு.ப 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம் பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி பால்பண்ணை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அம்மன் வீதி,
திருநெல்வேலி. (1040)

077 529 6312 (சதீஸ்)

தகவல்:
குடும்பத்தினர்


## கட்டடப் பொருட்கள் விநியோகம்

1.மணல் வகை - கட்டு மணல், பூச்சு மணல் (கண்டாவளை பெருக்கன் நைஸ்)
2.சல்லி வகை - கருங்கல் சல்லி, வெள்ளை சல்லி
3.கண்டல் வகை - 9" X 6" கருங்கல் , 9" X 6" வெள்ளைக்கல்(காட்டுக்கல்)
4.டஸ்ட் - கருங்கல் டஸ்ட், வெள்ளைக் கல் டஸ்ட்
5.கலவன் டஸ்ட்
6.தளம் மற்றும் நில பதிவுக் கல்
7.கூரை ஓடு வகைகள்

கொங்கிறீற் கல், கொங்கிறீற் வேலி, தூண் ஆகியவை நியாய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
கட்டட வேலைகளும் செய்துதரப்படும்.

தொடர்புகளுக்கு : 077 666 7684 / 076 096 4460 (641)

## காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் நுணாவில் சாவகச்சேரியில்
14 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்பு சூழ உள்ள பகுதி
- A9 வீதியில் இருந்து மட்டுவில் செல்லும் றோட் இலுப்பையடி வீதி அரசன் கடை அருகாமை
- பலன் தரும் மரங்கள் உண்டு
- தரகர் தேவையில்லை

தொடர்புகளுக்கு:
070 497 4565, 070 420 7343 (1045)

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


# திருமலை சாஹிரா கல்லூரி
## மாணவிகளின் பெறுபேறு நிறுத்தம்

(திருகோணமலை)

திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவிகளின் பெறுபேறு இடைநிறுத்தம் இனப்பாகுபாட்டின் வெளிப்பாடு என ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோண மலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு அவர் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

அவர் மேலும் கூறியதாவது,

பரீட்சை மண்டபத்தில் தமது காதுகளை மூடி பரீட்சை எழுதினார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரிலேயே இந்த இடை நிறுத்தம் இடம்பெற்றுள்ளது.

காதுகளை மூடி பரீட்சை எழுதியமை பரீட்சை மண்டபத்தில் கவனித்திருக்க வேண்டிய விடயம். அது ஏனைய பரீட் சார்த்திகளை பாதிக்கின்ற விடயமும் அல்ல.

இந்த விடயங்களை சகல தரப்பினருக்கும் தெளிவுபடுத்திய பின்னரும் பெறுபேறு இடைநிறுத்தப்பட்டுள்ளமை பாரிய சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

சாஹிரா கல்லூரியின் வளர்ச்சியை சகிக்க முடியாதவர்களின் இனப்பாகுபாட்டின் வெளிப்பாடு இதுவென்பது மிகத் தெளிவாகத் தெரிகின்றது.

பரீட்சை மண்டபத்தில் தீர்க்கப்பட்டிருக்க வேண்டிய இந்த விடயத்தை பெறுபேற்றை இடைநிறுத்தும் அளவுக்கு கொண்டு சென்ற பரீட்சை மேற்பார்வையாளரின் மனநிலையை இதன் மூலம் புரிந்து கொள்ள முடிகின்றது.

ஒரேமொழியை பேசும் நாம் இப்படி பிள்ளைகளின் உரிமைகளில் கைவைப்பது ஆரோக்கியமானதல்ல. பிள்ளைகளினதும் பெற்றோரினதும் இன்றைய சோகமான மனநிலையை சம்பந்தப்பட்டவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இது குறித்து பரீட்சை ஆணையாளருடன் தொடர்பு கொண்டு பேசியுள்ளேன். இந்த விடயத்தில் சகல முஸ்லிம் அரசியல் பிரதிநிதிகளும் ஒன்று பட வேண்டும். இது ஒரு சமூகப் பிரச்சினை.

கிழக்கு மாகாண முஸ்லிம் விரோத செயற்பாடுகளின் மற்றொரு வடிவம் இது என்றார். (ம-7.10)

## INVITATION FOR BID (IFB)
## DEPARTMENT OF LOCAL GOVERNMENT, NORTHERN PROVINCE
## DELFT PRADESHIYA SABHA
## WORLD BANK AND EU FUNDED
## LOCAL DEVELOPMENT SUPPORT PROJECT

1. The Democratic Socialist Republic of Sri Lanka has received Loan & Grant from the World Bank & European Union towards the cost of **Local Development Support Project (LDSP)** and intends to apply part of the proceeds of this credit to payment under the contract for construction works as stated in the table below.
2. The chairman, local Authority Procurement Committee on behalf of the **Pradeshiya Sabha, Delft, Northern Province,** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below

| No | Contract No | Contract Name | Employer's Estimated Cost Rs.(Mn) | Contract Period (Days) | Required CIDA Grade & specialty | Bid Validity Period | Bid Security Amount (Rs) | Bid Security Validity Period |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | LDSP/NP/JAF/DPS/2023/PT3/01 | Construction of Indoor Play Area at Delft centre | 18.39 | 90 Days | C6 or Above (Buildings ) | 04-Sep-2024 | 184,000.00 | 17-Oct-2024 |
| 2 | LDSP/NP/JAF/DPS/2023/PT3/05 | Reconstruction of Access Road to the Baobab Tree Area | 3.05 | 60 Days | C8 or Above (Road ) | 23-Aug-2024 | 30,000.00 | 17-Sep-2024 |

3. Bidding will be conducted through **National Competitive Bidding (NCB)** Procedure.
4. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted by Ministry of finance or World Bank or any other acceptable Institutions. And Domestic Contractors shall have been registered in the field of **Building/Road** construction for grade mentioned in the table above with the Institute for Construction Industry Development Authority (CIDA).
5. Qualification requirements are indicated in section 4 of the Bidding document. Additional details are provided in the Section 5 (Schedule) of the bidding document.
6. Interested eligible bidders may obtain further information from **Secretary, Delft Pradeshiya Sabha, Delft, (Tel.No.0212215211, Fax.0212215211, E-mail: tsecretarydelft@yahoo.com)** on any working day from 09:00 hrs. To 14:00 hrs. 01st June 2024 - 21st June 2024.
7. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the address below from 01st June 2024 - 21st June 2024 from 09:00 hrs. To 14:00 hrs. On working days upon payment of a non-refundable fee of Rs. 3000.00 for each contract. The method of payment should be by cash.
8. Bids shall be delivered in Original & Copy directly or sent by Registered Post to the address below on or before 14:30 hrs. On 21st June 2024. Late bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidders' representatives who choose to attend.
9. All Bids shall be accompanied by a bid security as per the information given in the table above.
10. Pre-bid meeting will be held on 10th June 2024 at 10:30 hrs. In the Pradeshiya Sabha Office, Delft. Interested bidders may attend the meeting at their own expense.

**Chairman,**
**Local Authority Procurement Committee (LAPC),**
**Local Development Support project (LDSP)**
**Delft Pradeshiya Sabha,**
**Jaffna, Northern Province.**

01.06.2024 (C-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை என்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை கனடா மீண்டும் சுமத்தக்கூடாது

## கனடாவிடம் கெஞ்சும் இலங்கை

**(கொழும்பு)**

**இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்ற ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளை கனடா மீண்டும் சுமத்தக்கூடாது என இலங்கை வேண்டுகோள் விடுத்துள்ளது.**



கனடாவின் சர்வதேச அபிவிருத்திக்கான பிரதி அமைச்சர் கிறிஸ்டபர்மக்லெனைன சந்தித்தவேளை இலங்கையின் வெளிவிவகார செயலாளர் அருணிவிஜயவர்த்தன இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இலங்கை வருவாய்ஈட்டல் வளர்ச்சியை நோக்கிய பயணத்தை மேற்கொண்டுள்ள சந்தர்ப்பத்தில் பொருளாதார ஸ்திரதன்மையை ஏற்படுத்துவதில் இலங்கை அடைந்துள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இலங்கை பொருளாதார இராஜதந்திரத்திற்கு கொடுத்துள்ள முன்னேற்றம் ஆகியவை குறித்து வெளிவிவகார செயலாளர் எடுத்துரைத்துள்ளார்.

நல்லிணக்கத்தை அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகளிற்கு சமாந்திரமாக இது இடம்பெறுகின்றது என அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற மோதல்கள் தொடர்பில் இனப்படுகொலை தொடர்பான தவறான கதைகளை வெளியிடும் விதத்தில் கனடாவில் அண்மைய ஆண்டுகளில் உயர் மட்டத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிவிப்புகள் தொடர்பில் இலங்கையின் ஆழ்ந்த கவலையை வெளிவிவகார செயலாளர் தெரிவித்துள்ளார்.


கனடா இலங்கையுடன் ஆக்கபூர்வமான விதத்தில் ஈடுபாட்டை வெளிப்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேச்சுவார்த்தை நல்லிணக்கத்திற்கான முயற்சிகளிற்கு உதவுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி-6)

# அஜித் நிவார்ட் கப்ரால் உட்பட ஐந்து பிரதிவாதிகள் விடுதலை

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் உட்பட ஐந்து பிரதிவாதிகளை விடுதலை செய்ய கொழும்பு மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதன்படி 2012 ஆம் ஆண்டு கிரீஸ் பத்திரங்களில் முதலீடு செய்து அரசாங்கத்திற்கு 1.84 பில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்தது.



அதன்படி இலஞ்ச ஆணைக்குழுவினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை கையளிக்க முடியாது மற்றும் பராமரிக்க முடியாது என பிரதிவாதிகள் சார்பில் ஆஜரான அஜித் நிவார்ட் கப்ரால் மற்றும் ஏனைய சட்டத்தரணிகள் ஆரம்ப ஆட்சேபனைகளை முன்வைத்திருந்தனர்.

இந்நிலையில் முதற்கட்ட ஆட்சேபனைகளை ஏற்றுக்கொண்ட நீதிபதி, குற்றவாளிகளை விடுதலை செய்ய உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# விஜயதாசவிற்கு எதிரான தடை நீக்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மற்றும் செயலாளராக அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மற்றும் கீர்த்தி உடவத்த ஆகியோர் செயற்படுவதைத் தடுக்கும் வகையில் கடுவெல மாவட்ட நீதிமன்றம் பிறப்பித்திருந்த தடை நீக்கப்பட்டுள்ளது.



அத்துடன், விஜயதாச ராஜபக்ஷவின் நியமனங்கள் மற்றும் அங்கத்துவம் என்பவற்றை மேற்கொண்ட நிறைவேற்று சபைக் கூட்டம் சட்டபூர்வமானது அல்ல எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (நி-6)

# முட்டை நுகர்வு அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் முட்டை நுகர்வு அதிகரித்துள்ளதாக விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதாவது கடந்த சில மாதங்களில் முட்டையின் நாளாந்த நுகர்வு 70 இலட்சமாகவும், பின்னர் 80 இலட்சத்தையும் கடந்துள்ளது. தற்போது முட்டையின் நாளாந்த நுகர்வு 10 இலட்சத்தால் அதிகரித்துள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு மற்றும் அதிக சத்தான மற்றும் மலிவாக கிடைக்கக்கூடிய உணவுகளான இறைச்சி, மீன் மற்றும் முட்டை விலைகள் அதிகரித்ததே நுகர்வு அதிகரிப்புக்குக் காரணம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

# குறைந்த எடை கொண்ட பாண் விற்பனை

## எட்டு பேக்கரிகளுக்கு ஏற்பட்ட கதி

(கொழும்பு)

நிர்ணயிக்கப்பட்ட எடைக்கு குறைவான பாண்களை விற்பனை செய்ததாக காட்சிப்படுத்திய 8 பேக்கரி கடைகளுக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகாரசபை கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

கொழும்பு, வெல்லம்பிட்டிய, கொலன்னாவ ஆகிய இடங்களில் அமைந்துள்ள எட்டு தனியார் பேக்கரிகளுக்கு எதிராக நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரி பிரதீப் களுஆராச்சி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தின் உத்தரவு எண் 93 இற்கு முரணாக நிர்ணயிக்கப்பட்ட எடையை விட குறைவான எடை கொண்ட பாண்களை விற்பனைக்காக காட்சிப்படுத்தியதன் மூலம் சம்பந்தப்பட்ட கடைகள் தவறிழைத்துள்ளதாக குறிப்பிட்ட அதிகாரசபை நீதிமன்றில் அறிக்கைத் தாக்கல் செய்துள்ளது.

முன்வைக்கப்பட்ட உண்மைகளை கருத்திற்கொண்ட நீதிமன்றம், சம்பந்தப்பட்ட பேக்கரி உற்பத்தியாளர்களை ஜூன் 11 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு சம்மன் அனுப்பியுள்ளது. (நி-6)

# 36 ஆயிரம் கருவிழிப் படலங்கள் இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு

(கொழும்பு)

36,000 கருவிழிப்படலங்களை இலங்கை பாகிஸ்தானுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளதாக பாகிஸ்தானுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ஓய்வுபெற்ற எட்மிரல் வீந்திர விஜேகுணவர்தன தெரிவித்துள்ளார்.

இலங்கை உலகிற்கு 88,000 கருவிழிப்படலங்களை நன்கொடையாக வழங்கியுள்ளது. அதில் பாகிஸ்தானுக்கே அதிகளவு வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

சுற்றுச்சூழலிலிருந்து ஒட்சிசனை எடுத்துக் கொள்ளும் 'கார்னியா' எனப்படும் கருவிழிப்படலம், இரத்தமில்லாத திசுவால் ஆனது. இதனை, தானமாக கொடுப்பவருக்கோ, அதனைப் பெற்றுக் கொள்பவருக்கோ, மருத்துவ ரீதியாக எந்தவொரு பொருத்தமும் வேண்டியதில்லை. அவை இயல்பாகவே எவருக்கும் ஏற்புடையதாகிவிடும். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறுதிப்போட்டிக்கு தெரிவான நவிண்டில் கலைமதி அணி

பரபரப்பான அரையிறுதி ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டு கழகம் நடத்தும் நாவலர் கிண்ணத்திற்கான கால்பந்தாட்ட போட்டிகள் குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகிறது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற அரையிறுதி ஆட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து கொற்றாவத்தை றேஞ்சஸ் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

இரு அணிகளுக்கும் பல வாய்ப்புகள் கிடைத்த போதிலும் கோலாக்க தவறிவிட்டனர். இரண்டாவது பாதியாட்டத்திலும் இரு அணிகளும் சமபலத்துடன் மோதினர்.



இரு அணிகளின் கோல் கம்பங்களை நெருங்கிய போதிலும் கோலாக்க தவற விட்டனர். இதனால் ஆட்ட நேரம் முடியும் வரை கோல் எதனையும் பெறாமல் நிறைவடைந்தது.

இதனால் சமநிலை தவிர்ப்பு உதைமூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது.

இதில் நவிண்டில் கலைமதி அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்திற்குத் தகுதி பெற்றுள்ளனர். (நி-6-90)

## அதிவேக 100 இலக்குகளை வீழ்த்திய இங்கிலாந்து வீராங்கனை




இங்கிலாந்தின் எக்லெஸ்டோன், ஒருநாள் போட்டியில் அதிவேகமாக 100 விக்கெட் சாய்த்த வீராங்கனையானார்.

இங்கிலாந்து சென்ற பாகிஸ்தான் பெண்கள் அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்றது.

இங்கிலாந்து அணி 2-0 என தொடரை கைப்பற்றி கிண்ணத்தை வென்றது.

"சுழலில்" அசத்திய இங்கிலாந்தின் சோபி எக்லெஸ்டோன், 6 விக்கெட் சாய்த்து தொடர் நாயகி விருது வென்றார். செம்ஸ்போர்டில் நடந்த 3 ஆவது ஒருநாள் போட்டியில் 3 விக்கெட் வீழ்த்திய எக்லெஸ்டோன், ஒருநாள் போட்டியில் குறைந்த இன்னிங்சில் 100 விக்கெட் கைப்பற்றிய வீராங்கனையானார்.

இதுவரை 63 இன்னிங்சில், 101 விக்கெட் சாய்த்துள்ளார். இதற்கு முன் அவுஸ்திரேலிய வேகப் பந்துவீச்சாளர் கேத்ரின் பிட்ஸ்பாட்ரிக் 64 இன்னிங்சில் இம் மைல்கல்லை எட்டியது சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## உலக கிண்ணத்திற்காக அமெரிக்கா நோக்கி...



இருபது-20 உலகக்கிண்ணத் தொடரில் பங்கேற்பதற்காக இலங்கை அணியினர் நியூயோர்க்கிற்கு பயணித்துள்ளனர்.

சமீராவுடன் வியாஸ்காந்த் விமானத்தில் இருக்கும் புகைப்படம் சமூக வலைத்தளத்தில் வெளியாகியுள்ளது.


அமெரிக்கா வெஸ்ட் இண்டீஸ் ஐ.சி.சி. , ரி-20 உலகக்கிண்ணத் தொடரின் 9 ஆவது சீசன் நாளை ஆரம்பமாகவுள்ளது.

மொத்தம் 20 அணிகள் பங்கேற்கின்றன. இலங்கை அணி தனது முதல் போட்டியில் தென்னாப்பிரிக்காவை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சந்திக்கவுள்ளது.

இதேவேளை குறித்த உலகக்கிண்ண தொடரில் இலங்கை அணியில் உதிரி வீரராக வியாஸ்காந்த் சேர்க்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்தின் இதயம் எரிந்த நாள்!



யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்டு 43 ஆண்டுகள் நிறைவு இன்று

கல்விக் கண்திறக்கும்
காரிருளில் ஒளி தெளிக்கும்
உள்ளம் தெளிய வைக்கும்
உணர்வுகளைப் பணியவைக்கும்
தெள்ளத் தெளிந்த நீராய்
தேகமதை மாற்றி வைக்கும்
நல்லதாம் நூலகங்கள்
நலன் கெட்டுப் போகலாமோ?

எண்சாண் உடம்பிற்கு
சென்னி சிறந்தது என்பர்
எம் தமிழர் வரலாற்றின்
சிரசாய் விளங்கிய
ஆசியாவின் அதிசயம்
யாழ்.நூலகம் என்ற பொக்கிஷம்

தமிழர் விதிமாற்ற,
சதி செய்தார்!
நடு நிசியில் கொள்ளிவால்
பேய்களாய்
கொழுத்தினர் நூலகத்தை

கொழுந்துவிட்டு எரிந்தது
தமிழரின் பொக்கிஷம்

நான் எரித்து அழிப்பது
நலன்மிக்க நல் நூல்களை...
நான் எரித்து அழிப்பது
தமிழினத்தின் வரலாற்றை...
நான் எரித்து அழிப்பது
தேடக் கிடைக்காத அரிச்சுவடிகளை...
நான் எரித்து அழிப்பது
ஆசியாவின் அதியுயர் நூலகத்தை...
என்று எண்ணிக் கலங்கிய நெருப்பு
தன்னைத் தானே தணிக்க முற்பட,

அல்ல; தீயே எரி... எரி... என்று
அணையும் நெருப்பில் -இனவாத
எண்ணெய் ஊற்றப்பட்டது...

தாண்டலில் துலங்காத நெருப்புண்டோ!
தமிழினத்தின் நேசவலையில் பின்னிய
நூலகத்தை; தீ தின்று முடித்தது!

கோட்டை முனியப்பனே!
தீ மூட்டியவர்களை நீ இனம்காணாதது ஏன்?

நல்லூர்க்கந்தனே!
தீயின் கரும்புகை உன் நாசிக்கு எட்டாதது ஏன்?

குருநகர் யாகப்பரே!
தீயை அணைக்க உம் கரங்களை நீட்டாதது ஏன்?

வான தேவதையே!
நூலகம் எரிவதுகண்டு உன் கண்கள் கலங்காது
மௌனமாய் இருந்தது ஏன்?

நம்பினோர் கைவிடப்படார்
என்ற ஒப்பந்த தத்துவம்
தமிழினத்திடம் பொய்த்துப் போனது.

யாழ்.நூலகம் முற்றாய் எரிந்ததாம்
என்ற செய்தி கேட்ட தமிழினத்தின் கண்ணீர்
ஆறாய் ஓடி, நூலகத்து
எல்லைவரை வந்து; எட்டி நின்றது!

இறைவா!
என் செய்வோம்!
இனி நாம் எங்கு செல்வோம் என்று
மாரடித்து மண்ணில்
புரண்டு புலம்பியது
தமிழினம்!

பயன் என்ன?
தவறிழைத்த தலைவனே
நடுவுநிலை செய்தால்
நிலை எவ்வாறிருக்கும்?

முடிந்தது!
எரிந்ததுடன் எல்லாம் முடிந்தது!
எரிந்த எச்சங்களில் தமிழினத்தின்
வரலாறுகள் வளரும்,
நாம் பீனிக்ஸ் பறவைகள் என்றோம்.
முடிவு முள்ளிவாய்க்காலில்
முற்றும் முடிந்து போனது!

இருக்கிறது
யாழ்.நூலகம் இப்போதும் இருக்கிறது
ஆனால்,
எண்ணற்ற நூல்கள் இல்லை!
அரும் பொக்கிஷங்கள் ஏதும் இல்லை!
கிடைத்தற்கரிய ஏட்டுச் சுவடிகள் எதுவும்
இல்லை!

எல்லாம் இருந்தது என்ற
பெயர் மட்டுமே இருக்கிறது!

நூலகம் எரிந்த நாள்
இன்று என்று
கொடி பிடிக்கவும்,
கோசம் எழுப்பவும் வரும்
அரசியல் வாதிகளே!

சுயநலத்திற்கு விலைபோன உங்கள்
புலிவேசத்தை களையுங்கள்!
ஒரு குடையில் ஒன்றுபடுங்கள்!
நிழல் என்பது,
வெயிலுக்கு மட்டுமானதல்ல
மழைக்கும் பொருந்தும்.

மாவை.நா.கஜேந்திரன்

## நான்கு விளையாட்டு சங்கங்களின் பதிவுகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

நான்கு விளையாட்டு சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களின் பதிவுகளை இடைநிறுத்தி விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவினால் அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

சைக்கிளோட்ட சம்மேளனம், ரக்பி சம்மேளனம், மோட்டார் விளையாட்டு சங்கம், வலைப்பந்தாட்ட சம்மேளனம் ஆகியவற்றின் பதிவுகளே இவ்வாறு இடைநிறுத்தப்பட்டுள்ளன.

குறித்த சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களின் தேர்தல்கள் உரிய முறையில் நடத்தப்படும் வரை, மே 29 முதல் அவற்றை விளையாட்டு அபிவிருத்தி திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் கீழ் பட்டியலிட்டுள்ளதாக வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பதிவுகள் இடைநிறுத்தப்பட்டுள்ள சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களின் நிர்வாகத்திற்காக இடைக்கால குழுக்கள் நியமிக்கப்படமாட்டாது என விளையாட்டுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாக இந்த வர்த்தமானி அறிவித்தலின் பின்னர் வெளியிடப்பட்டுள்ள விளையாட்டுத்துறை அமைச்சின் ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களின் தேர்தல்களை உரிய முறையில் நடத்துவதற்காக மாத்திரமே குறித்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

## இராசிபலன்

01.06.2024
வைகாசி 19, சனிக்கிழமை
நவமி காலை - 6.30 மணிவரை
தசமி பின்னிரவு - 4.04 மணிவரை

உத்திரட்டாதி பின்னிரவு 2.32
சுபநேரம் -2.52-4.22 மணிவரை
இராகுகாலம்-8.52-10.22 மணிவரை
சர்வதேச குழந்தைகள் தினம்

சந்திராஷ்டமம் - பூசம்

வளவன்




நண்பர்கள் கடைசி நேரத்தில் கைகொடுத்து உதவுவர், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.




பொது வாழ்வில் பாராட்டும் புகழும் கிடைக்கும் நாள், இனிய செய்திகள் வந்து சேரலாம், வாகன சுகமுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், மனதிற்கினிய சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.




கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் கூடும் நாள்.




ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், வாகனப் பழுதுச் செலவுகள் ஏற்படலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், உடல் நலனில் கவனம் தேவை.




குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம் பெறலாம், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.




நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், நன்மைகள் நடைபெறும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம்.




தூரத்து உறவினர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய செய்திகள் வந்து சேரலாம்.




எதிர்காலம் இனிமையாக அமைய திட்டங்கள் தீட்டுவீர்கள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.




தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் இடம் பெறலாம், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம்.




எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, நண்பர்களால் வளர்ச்சி கூடும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், வாக்கு மேன்மையுண்டு.




குடும்ப இரகசியங்களை மற்றவர்களிடம் பேசாதிருப்பது நல்லது, திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும் வாய்ப்புண்டு.

தவறை உணர்ந்தாலே மதியனைவரும் மன்னிக்கப்படுகிறான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடலை உருக்கும் புகைத்தல் பாவனை எதற்கு?

## யாழில் போராட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**"போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம். வலுவான தேசம் ஒன்றினை நிதமும் கட்டியெழுப்புவோம்" எனும் தொனிப்பொருளில் போதைப் பொருளுக்கு எதிரான கவனயீர்ப்பு பேரணியொன்று யாழ்ப்பாணத்தில் முன்னெடுக் கப்பட்டது.**



சர்வதேச புகைத்தல் மற் றும் போதை எதிர்ப்பு தினத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி பிரிவின் ஏற்பாட்டிலும் வடபிராந்திய நல்லொழுக்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் சுங்கானை பேருந்து நிலையத்திற்கு முன்னாலும் இப் பேரணி நேற்று வெள்ளிக் கிழமை முன்னெடுக்கப்பட் டது.

இதன் போது மகிழ்ச்சியான குடும்பத்திற்கு புகைத்தலே முதல் எதிரி, உடலை உருக் கும் சிகரெட் பாவனை எதற்கு? சினிமாவில் புகைப்பதைப் பார்த்து உன் கல்வியை அழிக் காதே, மானிடத்தின் உயிர் கொல்லி மதுவே நீ ஒழிக, அதிகரித்த இளவயது விவா காரத்திற்கு காரணம் போதைப் பொருளே, போதைபொருளை கைவிடு வாழ்வு வளமாகும், போதையில்லாத வாழ்வே எப் போதும் மகிழ்ச்சியைத் தரும் உட்பட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு கோசங்களை எழுப்பி பேரணியாக சென்ற னர். (நி-6-33)



# நூல்கள் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

இராஜினிதேவி சிவலிங்கம் எழுதிய நெய்தல் வாடை (சிறுகதைத் தொகுப்பு), விடை பெறும் கழுகுகள் (குறுநாவல்) ஆகிய இரு நூல்களின் வெளி யீட்டு விழா இன்று சனிக் கிழமை பி.ப 3.30 மணிக்கு ராஜா கிறீம் ஹவுஸ் சரஸ் வதி மண்டபத்தில் கவிஞர் சோ.பத்மநாதன் தலைமை யில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விரு ந்தினராக சாகித்தியரத்னா க.சட்டநாதன் கலந்து கொள்ள வுள்ளார். (நி-6)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யா/இராமநாதன் கல்லூ ரியின் பழைய மாணவர்க ளுக்கான (ஆண்கள்) கலந்து ரையாடல் எதிர்வரும் 16.06. 2024 ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணிக்கு நடைபெற உள் ளது. சகல (ஆண்) பழைய மாணவர்களும் இக் கலந்து ரையாடலில் கலந்து கொள் ளுமாறு பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது. (நி-6)





**யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி தமிழ் மன்னன் 2 ஆம் சங்கிலியனின் 405 ஆவது நினைவுதினம் நேற்று முத்திரைச்சந்தியில் உள்ள சங்கிலியன் தோப்பில் அனுஷ்டிப்பு.**

(படங்கள்: சிவசாந்தன்)

# நயினாதீவு நாகபூஷணி ஆலய மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெரு விழா எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ச்சியாக 16 தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் பத்தாம் திருவிழா ஜூன் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் கைலைக் காட்சியும், இரவு திருமஞ்சத் திருவிழாவும், 13 ஆம் திருவிழாவான 19 ஆம் திகதி புதன்கிழமை பகல் சிவ பூசைக் கைலைக் காட்சியும், இரவு சப்பறத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.

20 ஆம் திகதி வியாழக்கி ழமை காலை இரதோற்சவ மும், 21 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை தீர்த்தோற்ச வமும், அன்றைய தினம் மாலை திருவூஞ்சலும், மறு நாள் சனிக்கிழமை இரவு பூங்காவனம், ஞாயிற்றுக் கிழமை தெப்போற்சவத்துடன் நிறைவுபெறும் என நாக பூஷணி அம்மன் ஆலய அற ங்காவலர் சபை அறிவித்துள் ளது. (நி-6-33)

# மஹாகும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி - தோப்பு - தான்தோன்றி சரஸ்வதி அம் மன் கோவில் புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்சகுண்டபக்ஷ மஹாகும்பாபிஷேக விஞ்ஞா பனம் எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம் பெற வுள்ளது.

அதனை முன்னிட்டு எண் ணெய்க் காப்பு சாத்தும் நிகழ்வு எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக் கிழமை மு.ப 7.30 தொடக் கம் பி.ப 3.30 மணிவரை நடை பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை காலை 7.15 தொடக் கம் 8.15 மணிவரையுள்ள சுபவேளையில் மஹாகும்பாபி ஷேகம் இடம்பெறும். (நி-6-33)

# மாநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் வெற்றுக் கொள்கலன்கள் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் வெற்றுக் கொள்கலன் சேகரிக்கும் விப ரம்.

யாழ்நகர் I-ஜே/79, ஜே/80, ஜே/82, ஜே/81, யாழ் நகர் II-ஜே/73, ஜே/78, ஜே/74, ஜே/76, ஜே/77, ஜே/75 பிரிவு களில் திங்கட்கிழமையும், கொழும்புத்துறை-ஜே/61, ஜே/62, ஜே/63, ஜே/64, ஜே/65, ஜே/66 மற்றும் குரு நகர்-ஜே/71, ஜே/72, ஜே/69, ஜே/68, ஜே/67, ஜே/70 ஆகிய பிரிவுகளில் செவ்வாய்க்கிழமை யும், அரியாலை-ஜே/91, ஜே/92, ஜே/94 (part), ஜே/93, ஜே/95, ஜே/96 (part) மற் றும் நல்லூர் -ஜே/103, ஜே/105, ஜே/108, ஜே/106, ஜே/107, ஜே/109 ஆகிய பிரிவு களில் புதன்கிழமையும், நாவ ந்துறை-ஜே/83, ஜே/86, ஜே/84, ஜே/85, ஜே/87, ஜே/88 மற்றும் வண்ணார்ப ண்ணை-ஜே/97, ஜே/99 (part), ஜே/101, ஜே/104, ஜே/98, ஜே/100, ஜே/102, ஜே/123 ஆகிய பிரிவுகளில் வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் கொள்கலன் சேகரிப்பு இடம்பெறும் என யாழ்.மாநகர சபையின் சுகா தார வைத்திய அதிகாரி அறி வித்துள்ளார். (நி-6)

# சுயமரியாதைக்கான நடை பவனி யாழில்

(சாவகச்சேரி)

ஒடுக்குமுறைகள்-வன்மு றைகள் அற்ற சமூக மாற்றத் தினை வலியுறுத்தி எதிர்வரும் 8 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் "சுய மரி யாதைக்கான நடை" ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சமூகத்தில் வாழ்கின்ற அனைவருமே சமூகப் பொறுப் புடையவர்கள் என்பதனை வலியுறுத்தும் முகமாகவும்- திருநர் சமூகத்தையும் சக மனி தர்களாக கருதுவதுடன்-அவர் கள் தமது வாழ்வை வாழ்வ தற்கான உரிமைகளை பரி மாறுவதுடன்-ஒடுக்குமுறை களுக்கு உட்படாத வாழ்வை வாழ்வதனை உறுதி செய்யும் முகமாகவும் மேற்படி நடை பயணம் முன்னெடுக்கப்படவு ள்ளது.

மேற்படி மாற்றத்திற்கான நடைபவனியானது காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பேரு ந்து தரிப்பிடத்தில் ஆரம்பமாக சத்திரச் சந்தி-பண்ணை வீதி- பொலிஸ் நிலைய வீதி ஊடா கப் பயணித்து காலை 11 மணிக்கு யாழ்.பொது நூல கம் முன்பாக நிறைவடைய விருப்பதாக விழா ஏற்பாட்டா ளர்கள் தெரியப்படுத்தியுள்ள னர். (நி-6-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர்ச்சிகிச்சை முகாம்




(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் விவசாயிகள் பயிர்ச்செய்கை யின் போது எதிர்கொள்ளும் நோய்த்தாக்கத்தை குறைக்கும் நோக்கில் கிளிநொச்சி பிரதி மாகாண விவசாயத்திணைக் களத்தின் ஏற்பாட்டில் பயிர்ச் சிகிச்சை முகாம் நேற்று ஆரம் பிக்கப்பட்டுள்ளது.

மாதத்தில் இரண்டாவது வாரத்தின் செவ்வாய்க்கிழ மையும் அதே மாதத்தில் இறுதி வாரத்தின் வெள்ளிக்கிழமை யும் குறித்த பயிர்ச்சிகிச்சை முகாம் கிளிநொச்சி பிரதி மாகாண விவசாய திணைக் களத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

விவசாயிகள் தங்களது பயி ர்ச்செய்கையின் போது பயிர்க ளின் நோய் நிலைமைகளை நேரடியாக காண்பித்து கட்டுப் படுத்தல் முறைகளை பெற்றுக் கொள்ள முடியும். (நி-6-316)

# புகைத்தலுக்கு எதிராக மன்னாரில் விழிப்புணர்வு

(மன்னார்)

சர்வதேச புகைத்தல் தின த்தை முன்னிட்டு நாடளாவிய ரீதியில் பல்வேறு விழிப்புண ர்வு நிகழ்வு இடம் பெற்று வரு கின்றது அதன் ஒருபகுதியாக மன்னார் மாவட்ட இளைஞர் கள் இணைந்து மாவட்டத்தில் காணப்படும் கடைத் தொகு திகள், பொது பேருந்துகள், தரிப்பிடம் மற்றும் முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் மக்கள் மத்தியில் புரிதல் நிலையை ஏற்படுத்தும் வகையில் விழிப் புணர்வு செயற்பாடுகளில் ஈடு பட்டனர். குறிப்பாக போதை பொருள் பாவனைக்கு எதிராக தயாரிக்கப்பட்ட விழிப்புணர்வு ஒட்டும் தாள்கள் போன்றவ ற்றினை, பொலிஸ் அதிகாரி மற்றும் சமூக செயற்பாட்டா ளர்கள், இளைஞர்கள் இணை ந்து காட்சிபடுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6-285)



"நண்பா போதைக்கும் புகை த்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப் போம், வலுவான தேசம் ஒன் றினை கட்டி எழுப்புவோம்" எனும் தொனிப்பொருளில் நெடு ந்தீவு பிரதேசசெயலக சமுர்த்தி கிளையின் ஏற்பாட்டில் புகை த்தல் மற்றும் மதுப்பாவனைக்கு எதிரான விழிப்புணர்வு செயற் பாடு நேற்று இடம்பெற்றது. பிர தேச செயலக முன்றலில் இடம்பெற்ற நிகழ்வுகளில் பிரதேச செயலர் திருமதி.நிவேதிகா கேதீசன், சமுர்த்தி முகாமையாளர் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (படம்: சிவசாந்தன்)


# திரிபோஷா உற்பத்திக்கு மீண்டும் அனுமதி

(கொழும்பு)

தற்காலிகமாக நிறுத்தப்பட்டு ள்ள 6 மாதங்கள் முதல் 3 வயது வரையிலான சிறார்களு க்கு வழங்கப்படும் திரிபோஷா உற்பத்தியை மீண்டும் ஆரம்பி ப்பதற்கு அனுமதி வழங்க சுகா தார அமைச்சு தீர்மானித்துள் ளது. சுகாதார சேவைகள் பணி ப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன இதனை தெரிவித்துள்ளார்.

இதன்படி, நாட்டில் அடையா ளம் காணப்பட்ட ஊட்டச்சத்து தேவைகளை குழந்தைகளு க்கு வழங்குவதற்காக, குறிப் பிட்ட காலத்திற்கு நிபந்தனைக ளுடன் திரிபோஷா உற்பத்தி க்கு அனுமதி வழங்கப்பட்டதாக சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் மேலும் குறிப்பி ட்டார். (நி-6)

# அகற்றப்படாமலுள்ள யானையின் உடல்



(முறிகண்டி)

யாழில் இருந்து வவுனியா நோக்கி பயணித்த புகையிரதத்தோடு மோதி தாய் யானையும் குட்டியும் கடந்த 25 ஆம் திகதி சனிக்கிழமை பலியா கியிருந்தது.

உயிரிழந்த குறித்த யானை முறையாக அகற்றப்படாமையால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுவது டன், சுகாதார பாதிப்புகளும் ஏற்பட்டு ள்ளது. (நி-6-100)

**லங்கா மஹால் (PVT) LTD**

**உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை**

அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே
வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(898)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :
**0091956615 6719**

WESTERN UNION WU MoneyGram. Ria MONEY TRANSFER

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

# ஆதனப் பெயர்மாற்றம்

**ஆதனப்பெயர்மாற்றம்**

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -13 அபூபக்கர் வீதி, ஆதன இல 160, என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் எம். எஸ். மொகமட் சுல்தான் மற்றும் ஆயிஷா உம்மா என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை மேற்கு இறையில் அசானாலெப்பை சித்தி அசீமா அவர்கள் 15.12.2014ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு எம். எஸ் பலீல் முகதாவில் 1351ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் 1990ஆ ம் ஆண்டு காலப்பகுதியில் இடப்பெயர்வின் போது சகல ஆவணங்களும் தொலைந்து விட்டதாகவும். காணிப்பதிவகத்தில் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனவும் வெளிப்படுத்தியுள்ளார்.

குறித்த ஆதனத்தை அசானாலெப்பை சித்தி அசீமா 22.11.2022 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறிதரன் முகதாவில் 4187ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் ரஜப் அஸ்கர் என்பவருக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை ரஜப் அஸ்கர் 04.05.2022 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ஜெயச்சித்திரா சிறிதரன் முகதாவில் 4732ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யோகராசா இராஜரூபன் மற்றும் மனைவி யமீரா என்பவருக்கு வழங்கியுள்ளார்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம். யாழ்ப்பாண மாவட்டம். யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை மேற்கு இறை யாழ்ப்பாணம் பிரதேச செயலக பிரிவு யாழ் மாநகரசபை எல்லைக்குட்பட்ட J/86ஆம் இலக்க கிராமஅலுவலர் பிரிவில் "தாழ்வுப்புலம்" நிலப்பரப்பு 0 குளி 8.3 உத்தரவு பெற்ற நில அளவையாளர் கே. கனகசபை அவர்களால் 18.12.2023ஆம் திகதி அளந்து விபரித்த 5702 A/13 இலக்க படத்தின்படி நிலப்பரப்பு லொட் 1 எனக்காட்டப்பட்டுள்ளது. இது உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் எஸ்.பத்மகாந்தன் அவர்களால் 17.10.2020 ஆம் திகதி 85 ஆம் இலக்கத்தில் அளந்த நில அளவைப்படத்தில் லொட்1, லொட் 2, லொட் 3 எனக்காட்டப்பட்டதன் படி நிலப்பரப்பு 0 குளி 7.77 இதில் லொட் 1 எனக்காட்டப்பட்ட நிலப்பரப்பு பூச்சியம் குளி ஐந்து தசம் ஏழு நான்கு (நில.பர0 குளி 5.74) கட்டடமும் அரைவாசிக் கிணறும்.

இதற்கு எல்லைகள்:

கிழக்கு: முன்னுறுதிப்படி சாகுல் கமீட் பெண் ஆயிஷாஉம்மாவின் ஆதனம்.

வடக்கு: காதி அபூபக்கர் வீதி

மேற்கு: லொட் 2 என்ற பாதைக்காக விடப்பட்ட பாகம்.

தெற்கு: உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் கே. கனகசபையின் 5702A/13 இலக்க படத்தில் லொட் 2 என்ற பாகம்.

இதடங்கலும் இன்னும் லொட் 2 என்ற பாதைக்காக விடப்பட்ட பாகத்தால் போக்குவரத்து உரித்தும்,

தற்போது இவ்வாதனத்தைத் யோகராசா இராஜரூபன் மற்றும் மனைவி யமீரா என்பவர்கள் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது யோகராசா இராஜரூபன் மற்றும் மனைவி யமீரா என்பவர்கள் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**
(சி-497)

# வலிகாமம் மேற்கு பிரதேசசபை, சுழிபுரம் ஆதனப் பெயர்மாற்றம்

## 391, யாழ்ப்பாண வீதி, வட்டாரம்-03

வலிகாமம் மேற்கு பிரதேச சபை சங்கானை உப அலுவலகத்திற்குட்பட்ட வட்டாரம் 03, யாழ்ப்பாண வீதியிலுள்ள இல: 391 ஆகிய ஆதனம் எமது ஆதனவரிப்பதிவேட்டின் பிரகாரம் **K.முத்தையா** என்றே காணப்படுகிறது.

பெயர் மாற்றத்திற்குட்படும் ஆதனத்தினை **முத்தையா சர்வானந்தன்** ஆகியவர் தனது தந்தையார் கந்தையா முத்தையா 35 வருடங்களுக்கு முன்பதாக தம்பையா தங்கராசா என்பவரிடமிருந்து வாங்கி புதுப்பித்து கடை கட்டி நடாத்தி வந்திருந்தார் என்றும் அவர் காலஞ்செல்ல குறித்த கடை ஆதனத்தினை புதுப்பித்து இன்றுவரை எந்த இடையூறுமின்றி தானே வியாபாரத்துக்காக வரிகட்டி ஆண்டு அனுபவித்து வருவதாகவும் பிரகடனப்படுத்தி பிரசித்த நொத்தாரிசு த.மு.கதிர்காமநாதன் முகதாவில் 2811/30.11.1998 ஆம் இலக்கத்தில் பிரகடனப்படுத்தல் உறுதியொன்றை நிறைவேற்றியிருந்தார்.

குறித்த **முத்தையா சர்வானந்தன்** ஆகியவர் ஆதனப் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபணை தெரிவிப்பர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது **முத்தையா சர்வானந்தன்** ஆகியவருக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் மேற்கு பிரதேசசபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.


**தவிசாளர்/செயலாளர்,**
**வலிகாமம் மேற்கு பிரதேசசபை.**
(1037)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# ஜம்மு-காஷ்மீரில் பேருந்து விபத்து

## 15 பேர் உயிரிழப்பு



(டில்லி)

ஜம்மு-காஷ்மீரில் பேருந்தொன்று பள்ளத்தில் கவிழ்ந்து வித்துக்குள்ளானதில் குறைந்தது 15 பேர் வரை உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆன்மிக சுற்றுலாவுக்காக பயணிகளை ஏற்றிச் சென்ற குறித்த பேருந்து, ஜம்மு காஷ்மீர் அக்னுார் பகுதியில் பள்ளத்தில் கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில், 15 பேர் வரை உயிரிழந்துள்ளதாகவும் பலர் காயமடைந்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

காயமடைந்தவர்கள் அக்னுாரிலுள்ள வைத்தியசாலை மற்றும் ஜம்மு விலுள்ள அரச மருத்துவக் கல்லூரியிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்துக்குள்ளான குறித்த பேருந்து உத்தரப்பிரதேசத்தின் ஹத்ராஸை சேர்ந்த பயணிகளை ஏற்றிக் கொண்டு, ஹரியானாவின் குருக்ஷேத்ராவில் இருந்து ஜம்முவின் ரியாசி மாவட்டத்தில் அமைந்துள்ள சிவ்கோரி ஆலயத்திற்கு சென்று கொண்டிருந்தது.

இதன்போது, ஜம்மு - பூஞ்ச் அதிவேக வீதியில் காளி தார் மந்திர் அருகே சாரதியின் கவனக்குறைவால் 150 அடி பள்ளத்தில் கவிழ்ந்ததாக முதற்கட்ட விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. (ந-6)

# டொனால்ட் ட்ரம்

# அமெரிக்க நீதிமன்றம்

**(நியூயோர்க்)**

**அமெரிக்கா முன்னாள் ஜனாதிபதி டொ... வணிக ஆவணங்களில் பொய்யான விபரங்... வழக்கில் குற்றவாளி என நியூயோர்க்... அறிவித்துள்ளது.**

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனாலட் ட்ரம்ப், ஆபாச நடிகை ஸ்டார்மி டேனியல்ஸ்க்கு பணம் கொடுத்த விவகாரத்தில் சிக்கினார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு ட்ரம்ப் ஜனாதிபதி தேர்தல் போட்டியின் போது அவருடன் இருந்த ரகசிய உறவு குறித்து ஸ்டார்மி டேனியல்ஸ் பரபரப்பு தகவலை வெளியிட்டார்.

தேர்தல் பிரசார சமயத்தில் ஆபாச நடிகை ஸ்டார்மி வெளியிட்ட தகவலால் ட்ரம்புக்கு தர்ம சங்கடம் ஏற்பட்டது.

இதையடுத்து இவ் விவகாரத்தை ஸ்டார்மி பேசா மல் இருக்க அவருக்கு ரூ.1.07 கோடி ட்ரம்ப் மூலம் வழங்கப்பட்டது.

இந்தத் தொகை ட்ரம்பின் தேர்தல் வரவு, செலவு கணக்கில் சட்ட ரீதியிலான செலவு என்று குறிப்பிடப்பட்டது.

அமெரிக்காவில் பொய்யாக வணிக செலவை காட்டுவது சட்ட விரோதம் என்பதால் ட்ரம்ப் மீது விசாரணை நடந்து வந்த நிலையில் அவர் மீது சமீபத்தில் தேர்தல் பிரசார வணிக சட்டத்தின் கீழ் கிரிமினல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது.

இதனால் ட்ரம்ப் கைது செய்யப்பட்டார். அவர் மீது 34 மோசடி

# வட மாநிலங்களை வாட்டி வதைக்கும் வெயில் பீகாரில் 20 பேர் இதுவரை உயிரிழப்பு

(டில்லி)

பீகாரில் அதிகரித்துவரும் வெப்பநிலை காரணமாக இதுவரை 20 பேர் உயிரிழந்துள்ளதாக அம்மாநில சுகாதாரத்துறை தகவல் தெரிவித்துள்ளது.

அத்துடன் சுமார் 40 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அம் மாநிலத்தில் கடந்த சில நாட்களாக 40°C இற்கும் மேல் வெப்பம் அதிகரித்துள்ளதால் பலரும் வெப்ப வாதத்தால் (ஹீட் ஸ்ட்ரோக்கால்) பாதிக்கப்பட்டு வருகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ந-6)

# உடல் நலம் தேறினார் சுலோவேகியா பிரதமர்



(சுலோவேகியா)

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான சுலோவேகியாவின் பிரதமர் 'ராபர்ட் பிகோ' தற்போது உடல் நலம் தேறி வருவதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

பிரதமர் ராபர்ட் பிகோ அண்மையில் நிகழ்ச்சியொன்றில் உரையாற்றிக் கொண்டிருந்த வேளை மர்ம நபரொருவர் ராபர்ட் மீது மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்தார்.

இதனையடுத்து பிரதமர் உடனடியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இதேவேளை தாக்குதல் மேற்கொண்ட நபரைக் கைதுசெய்த பொலிஸார் இது தொடர்பான தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இச்சம்பவமானது உலகளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது.

இந்நிலையில் கடந்த 2 வாரங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த பிரதமர் 'ராபர்ட் பிகே' தற்போது நலமுடன் இருப்பதாகத் துணை பிரதமரும், பாதுகாப்பு துறை அமைச்சருமான ராபர்ட் கலினாக் தெரிவித்துள்ளார். (ந-6)

# ஏமனில் அமெரிக்கா-பிரிட்டி... பலர் கொல்லப்பட்

(சனா)

ஏமனில் அமெரிக்க - பிரிட்டிஷ் படையினர் கூட்டு விமானத் தாக்குதலில் பலர் கொல்லப்பட்டதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஏமன் தலைநகர் சனா மற்றும் ஒரு முக்கிய துறைமுக நகரம் உட்பட அந்நாட்டின் பல்வேறு தளங்களில் நேற்று முன்தினம் இரவு துவங்கி நேற்று அதிகாலை வரை அமெரிக்கா - பிரிட்டிஷ் படையினர் இணைந்து வான்வழி தாக்குதல் நடத்தினர். இதில் பலர் கொல்லப்பட்டதாக பிரிட்டன் அதிகாரிகள் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கட்டுப்பாட்டில் உள்ள சேனல் அல்-மசிரா வெளியிட்டுள்ள தகவலில், டேஸ் நகரில் உள்ள தொலைத்தொடர்பு உள்கட்டமைப்பை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டதாகவும், இதில் பலர் கொல்லப்பட்டதாகவும்,



ஏராளமானோர் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், அப் பிராந்திய ஊடகங்களின் சுயாதீனமான விசாரணையில் இந்த தகவலை உடனடியாக உறுதிப்படுத்த இயலவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ம்ப் குற்றவாளி!
## ...ம் வரலாற்றுத் தீர்ப்பு!

...டொனால்ட் ட்ரம்ப்
...பரங்களைச் சேர்த்த
...யார்க் நீதிமன்றம்



...ாய் ...வெ ...தம் ...மீது ...ந்த ...மீது ...பிர ...ின் ...றச் ...ப்ப ...ம்ப் ...ார். ...சடி

வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

இந்நிலையில், நடிகைக்கு பணம் கொடுத்த வழக்கில் டொனால்ட் ட்ரம்ப் மீது சுமத்தப்பட்ட 34 குற்றச்சாட்டுகளிலும் அவர் குற்றவாளி என அறிவித்த நீதிபதி மெர்க்கன், ஜூலை 11 ஆம் திகதி ட்ரம்ப்புக்கான தண்டனை விவரங்கள் அறிவிக்கப்படும் என தெரிவித்தார்.

இந்த அறிவிப்பு காரணமாக ட்ரம்ப் தேர்தலில் போட்டியிடுவதில் எவ்வித சிக்கலும் இல்லை என கூறப்படுகிறது.

அமெரிக்காவில் ஒரு முன்னாள் ஜனாதிபதி குற்ற வழக்கில் குற்றவாளி என அறிவிக்கப்படுவது இது முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ...ிட்டிஷ் வான்வழித் தாக்குதல்
## ...பட்டதாக தகவல்



...டை ...பட் ...ிரா ...யா ...யில் ...பாக ...ளை.

செங்கடல் பகுதியில் கப்பல்களை குறிவைத்து தாக்கும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அமெரிக்கா, பிரிட்டிஷ் கப்பல்கள் மற்றும் இஸ்ரேலிய துறைமுகங்களுக்கு செல்லும் அனைத்து கப்பல்களையும் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதற்கு பதிலடியாக கடந்த ஜனவரி முதல் ஏமனில் உள்ள ஹவுதி இலக்குகள் மீது அமெரிக்காவும் பிரிட்டனும் இணைந்து அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன. எனினும் இந்த தாக்குதல் ஹவுதி கிளர்ச்சியாளர்களை முழுமையாக கட்டுப்படுத்தவில்லை.


ஹவுதி கிளர்ச்சியாளர்கள் தெற்கு காசா பகுதி நகரமான ரஃபாவில் இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு பதிலடியாக கிரேக்க நாட்டு கப்பல் மற்றும் இதர கப்பல்களை தாக்கியதாக ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடந்த புதன்கிழமை தெரிவித்தனர்.

இந்நிலையில் பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில், "செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடாவில் சர்வதேச கப்பல் போக்குவரத்தின் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் நடத்தும் தாக்குதலை மட்டுப்படுத்துவதற்காக அவர்களுக்கு எதிராக அமெரிக்கப் படைகளுடன் கூட்டு நடவடிக்கையில் பிரிட்டிஷ் விமானங்கள் தாக்குதல் நடத்தியது" என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## ஐ.நாவில்
# ஈரான் ஜனாதிபதிக்கு அஞ்சலி
### நிகழ்வை புறக்கணிக்க அவுஸ்திரேலியா முடிவு

(கன்பெரா)

ஐக்கியநாடுகள் பொதுச் சபையில் ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசிக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வை அவுஸ்திரேலியா புறக்கணிக்கவுள்ளது.



ஈரான் ஜனாதிபதிக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வை அமெரிக்கா புறக்கணிக்கவுள்ளதாக தெரிவித்துள்ள நிலையிலேயே அவுஸ்திரேலியாவும் புறக்கணிக்கவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.


ஐக்கியநாடுகள் பொதுச் சபை நிகழ்வில் அவுஸ்திரேலிய பிரதிநிதிகள் எவரும் கலந்து கொள்ளமாட்டார்கள் என உறுதியாக தெரியவருவதாக கார்டியன் தெரிவித்துள்ளது.

டெஹ்ரானின் கசாப்புக் கடைக்காரன் என பல ஈரானியர்கள் தெரிவிக்கும் அஞ்சலி செலுத்தும் ஐ.நாவின் இந்த நிகழ்வை புறக்கணிக்க வேண்டிய தார்மீக கடமை அவுஸ்திரேலிய அரசாங்கத்திற்குள்ளது என லிபரல் கட்சியின் கிளைரே சான்ட்லர் தெரிவித்துள்ளார்.

ரைசி அரசாங்கத்தின் கீழ் பாதிக்கப்பட்ட அப்பாவி பொது மக்களிற்கு அவுஸ்திரேலியா ஆதரவாகயிருக்கவேண்டும்.

இப்ராஹிம் ரைசி பல பதவிகளில் இருந்த காலத்திலேயே ஈரானில் மிக மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளன 1988 இல் ஆயிரக்கணக்கான சிறைக் கைதிகள் கொல்லப்பட்டனர் என தெரிவித்துள்ள அமெரிக்க அதிகாரிகள் தாங்களும் அஞ்சலி செலுத்தும் நிகழ்வை புறக்கணிக்கப்போவதாக தெரிவித்துள்ளனர் என லிபரல் கட்சியின் கிளைரே சான்ட்லர் தெரிவித்துள்ளார். (நி-6)

# கலவரம் தொடர்பான வழக்கு
# இம்ரான்கான் விடுதலை



(இஸ்லாமாபாத்)

கலவரம் தொடர்பான வழக்கில் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும், தெஹ்ரீக்-இ-இன்சாஃப் கட்சியின் தலைவருமான இம்ரான்கானை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

கடந்த ஆண்டு ஊழல் வழக்கு ஒன்றில் இம்ரான்கானைப் பொலிஸார் கைது செய்தனர். இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அவரது ஆதரவாளர்கள் மே 9 ஆம் திகதி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது ராவல் பிண்டியில் உள்ள இராணுவ தலைமையகம், அருங்காட்சியகம் என பல கட்டடங்கள் சேதமடைந்தன. இதேவேளை கலவரத்தில் ஈடுபட்டோரை பொலிஸார் கைது செய்தனர்.

மேலும் போராட்டத்தின்போது கலவரத்தை தூண்டியதாக இம்ரான் கான் மீதும் பொலிஸார் வழக்குப் பதிவு செய்தனர்.

இதுதொடர்பான வழக்கு இஸ்லாமாபாத் மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில் "இம்ரான்கான் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கு போதிய ஆதாரம் இல்லை" எனத் தெரிவித்து குறித்த வழக்கில் இருந்து அவரை நீதிமன்றம் விடுதலை செய்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# மருத்துவர்கள் பற்றாக்குறை
# அபாயத்தில் மருத்துவமனைகள்

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

**(கொழும்பு)** மருத்துவர்கள் பற்றாக்குறை பிரச்சினை மேலும் தொடர்ந்தால் மருத்துவமனைகளை மூடவேண்டிய நிலை ஏற்படலாம் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

போதிய வைத்தியர்கள் இல்லாத காரணத்தினால், நாடு முழுவதிலும் உள்ள பல புற வைத்தியசாலைகளில் நோயாளர் பராமரிப்பு சேவைகளை பேணுவது பாரிய சவாலாக மாறியுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

உரிய தரப்பினர் நாட்டின் மருத்துவ அமைப்பிற்கு தேவையான அளவிற்கு மருத்துவர்களை நியமிப்பதற்கு அனுமதி வழங்காவிட்டால், வைத்தியர்கள் இன்றி பாதிக்க பட்டுள்ள மருத்துவமனைகளை மூடுவது குறித்து தீர்மானிக்க வேண்டிய நிலையேற்படும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.



மருத்துவமனைகளிற்கு நியமிக்கப்படும் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்காததால் நாட்டின் மருத்துவத்துறையில் பெரும் நெருக்கடி உருவாகியுள்ளதாக ஊடக பேச்சாளர் வைத்தியர் சமால் விஜயசிங்க தெரிவித்துள்ளார் (ரி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 300 | 300 | 300-350 | 400 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 160 | 80 | 120 | 120-150 | 200 |
| தக்காளி | 200 | 200 | 200 | 200 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 130 | 140 | 150 | 120 | 200 |
| கோவா | 250 | 260 | 200 | 200 | 250 |
| கரட் | 250 | 280 | 350 | 250 | 300 |
| பூசணி | 100 | 100 | 120 | 90 | 120 |
| புடோல் | 200 | 200 | 200 | 150 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 70-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 250 | 250-400 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 230 | 250 | 250 |
| பாகற்காய் | 800 | 1000 | 600 | 600 | 700 |
| வெண்டக்காய் | 150 | 200 | 200 | 230 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 140 | 120 | -- | 240 |
| பயற்றங்காய் | 150 | 120 | 60 | 60-80 | 150 |
| லீக்ஸ் | 420 | 450 | 300 | 350 | 450 |
| பீற்றூட் | 400 | 450 | 600 | 300 | 500 |
| கறிமிளகாய் | 200 | 350 | 400 | 300 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 500 | 600 | 400-700 | 800 |
| போஞ்சி | 600 | -- | 600 | 400 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 200 | 300 | -- | 360 |
| கீரை - 1 பிடி | 150 | 150 | 100 | 40-80 | 120 |
| தேசிக்காய் | 1000 | 1000 | 1000 | 800-1100 | 1200 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 110 | 80 | 50-100 | 80-120 |
| இராசவள்ளி | 350 | 450 | 400 | 250 | 400 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 180 | 400 | 200 | 80 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 140 | 180 | 120 | 70 | -- |

# இன்று ஒரு தகவல் 141



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## ஆளில்லா விமானம்

ஒரு திருமண விருந்து நடந்து கொண்டிருக்கின்றது. எல்லோரும் குனிந்த தலை நிமிரவில்லை சாப்பாட்டிலே அவ்வளவு ஆர்வம்.

"இவரைக் கொஞ்சம் ஸ்பெஷலாக கவனி" என்று சொல்கிறார் ஒருவர். சாதாரணமாக இப்படிக் கூறினால் என்ன அர்த்தம்? காய், கறி எல்லாம் கொஞ்சம் தாராளமாக வை! என்று அர்த்தம். ஆனால் இவர் "ஸ்பெஷலாக கவனி" என்று கூறியதற்கு வேறு அர்த்தம்.

ஏன் சார் அவரை ஸ்பெஷலாக கவனி என்று கூறுகிறீர்கள் என்று கேட்டார் இன்னொருவர். அந்த ஆளை சரியாக கவனிக்காமல் விட்டால் நாம் ஏமாந்து விடுவோம். ஏன் என்றால் அவர் எந்தத் திருமணத்திற்குச் சென்றாலும் திரும்பி வரும்போது ஒரு டம்ளரை கடத்திக் கொண்டு வந்து விடுவார். அது தான் அவரை ஸ்பெஷலாக கவனிக்கச் சொன்னேன் என்றார் இவர். ஆக இப்படி இந்த கடத்தல் இந்த உலகத்திலே எத்தனையோ விதத்திலே நடந்து கொண்டிருக்கிறது. இப்போது இந்த உலகிலே மிகவும் முக்கியமாக பேசப்படும் கடத்தல் போதை மருந்துக் கடத்தல்.

அதைத் தடுப்பதற்கு எவ்வளவோ முயற்சிகளை செய்து கொண்டு தான் இருக்கிறார்கள். இருந்தாலும் இது அத்தனை பேருடைய கண்ணிலேயும் மண்ணைத் தூவிவிட்டு அது பாட்டுக்கு நடந்து கொண்டிருக்கிறது. உலகத்தையே மிகவும் பயமுறுத்திக் கொண்டிருக்கும் விடயம் இது. இந்தக் கடத்தலைக் கண்டுபிடிப்பதற்கு என்றே இப்போது ஒரு விமானத்தையே பயன்படுத்துகின்றார்களாம். விமானம் என்றால் எப்படி? இது ஆளில்லா விமானம். அந்த விமானத்திற்கு "காண்டோர்" என்று பெயர். இது ஆள் இல்லாமலே தானாகவே உயரத்திற்கு செல் லும், தானாகவே வந்து தரையிலே இறங்கும். அது மட்டும் இல்லை கண்ணிற்கு எட்டாத அளவு உயரத்தில் இது பறக்குமாம். அதாவது சுமார் 20 கிலோமீற்றர் உயரத்தில் பறக்கும். 65 000 அடி!

இது தரையில் இறங்காமல் தொடர்ந்து ஆகாயத்திலே பல நாள் சுற்றிக் கொண்டிருக்கும். கணனி எப்படி உத்தரவு போடுகின்றதோ அதன் பிரகாரம் அது பறந்து கொண்டே இருக்கும். கீழே கட்டுப்பாட்டு அறையிலிருந்து ஒரு உத்தரவு போட்டு அதை வேறு இடத்திற்கு அனுப்பி வைக்கலாம். எங்கே சொல்கிறோமோ அங்கே சென்று அது பறந்து கொண்டிருக்கும். இது ஒரு கண்காணிப்பு விமானம். இதிலே ராடார் சாதனம் இருக்கிறது. இரண்டு பக்கமும் கமெரா இருக்கிறது. அது படம் எடுத்து தொடர்ந்து தரையில் இருக்கும் கட்டுப்பாட்டு நிலையத்திற்கு தகவல் அனுப்பிக் கொண்டிருக்கும்.

கடலில் குறிப்பிட்ட பகுதியில் கள்ளக் கடத்தல் செய்வதாக சந்தேகப்படும் ஒரு கப்பல் இல்லையென்றால் படகு போய்க் கொண்டிருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அது கரையிலே உள்ள எந்த இடத்தை நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதை தரையில் உள்ள கட்டுப்பாட்டு நிலையத்தில் இருந்தே கண்காணிக்க முடியும். கள்ளக் கடத்தல் படகிலே இருப்பவர்களுக்கு இவ் விமானம் பறப்பது கண்ணுக்குத் தெரியாது.இந்த விமானம் பிஸ்டன்களால் இயங்குகின்ற விமானமாம். இதை சோதனைக்காக முதலிலே பறக்க விட்டுப் பார்த்தார்களாம். அப்போதே இது 66,980 அடி உயரம் பறந்து சாதனை படைத்ததாம். பிஸ்டன் எஞ்சின் விமானம் இவ்வளவு உயரத்தில் பறப்பது உலக சாதனையாம். இதனுடைய இறக்கைகள் ஒரு முனையில் இருந்து இன்னொரு முனை வரை 200 அடி இருக்கிறதாம். போதை மருந்துக் கடத்தலைத் தடுப்பதற்காக அமெரிக்கா தான் முதன்முதலாக இவ் விமானத்தை பயன்படுத்தப் போகின்றதாம்.

அது இருக்கட்டும்! வருங்காலத்திலே இப்படி நடந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. எப்படித் தெரியுமா? சர்வதேச கடத்தல் கண்காணிப்பு நிலையம் ஒன்று இருக்கிறது. அங்கே ஒருவர் கடத்தல் புகார் கொடுக்கிறார். "சார் இந்து மகா சமுத்திரத்தில் இந்த இடத்தில் கடத்தல் படகு போய்க் கொண்டிருப்பதாக தகவல் கிடைத்துள்ளது" என்கிறார். சரி நமது கடத்தல் கண்காணிப்பு விமானத்தை அந்த இடத்திற்கு அனுப்புங்கள் என்று உத்தரவு போடுகிறார்கள். விமானம் புறப்பட்டுச் செல்கிறது.

இரண்டு நாள் கழித்து மறுபடியும் ஒரு கடத்தல் புகார் வருகின்றது. வந்தவர், "சார்! இந்து மகாசமுத்திரத்திலே..என்று ஆரம்பித்தார். அது தான் முதலே தெரியுமே என்றார்கள். அது வேற இது வேற சார்! முன்பு கடத்தியது போதைப்பொருள்! இப்போது கடத்துவது வேறு என்றார் வந்தவர். இது என்ன? என்றார்கள்.

"இப்போது கடத்தப்பட்டது நாம் அனுப்பிய கண்காணிப்பு விமானம்" என்றார் இவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சாவுடன் கைதான நபர் விளக்கமறியலில்

(கண்டாவளை)

யாழ்.மருதங்கேணி பகுதியில் கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

கிளிநொச்சி நீதிவான் நீதி மன்ற எல்லைக்குட்பட்ட மருதங்கேணி பொலிஸ் பிரிவில் கஞ்சாவை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஒருவர் நேற்று கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட வேளை குறித்த நபரை எதிர்வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி-6-315)

# சீரணி நாகபூசணி பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் சீரணி ஸ்ரீ நாகபூசணி அம்பாள் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8.55 மணி முதல் 10.20 வரையுள்ள சுப வேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது என தேவஸ்தான தர்மகர்த்தா சபையினர் அறி வித்துள்ளனர். (நி-6)

# குளவிக் கொட்டுக்கு இலக்கான இருவர்

## மருத்துவமனையில் அனுமதி

(குருமன்காடு)

வவுனியா பிரதி மாகாண விவசாய பணிப்பாளரின் அரச விடுதியை துப்பரவு செய்த திணைக்கள தொழிலாளர்கள் இருவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகி வவுனியா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, வவுனியா பிரதி மாகாண விவசாய பணிப்பாளரின் அரச விடுதியை துப்புரவு செய்யத் திணைக்களத் தொழிலாளர்கள் இருவர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இரு தொழிலாளர்களும் விடுதியை துப்புரவு செய்தபோது அங்கிருந்த குளவிகள் கலைந்து இருவருக்கும் கொட்டியதில் இருவரும் வவுனியா மருத்துவமனையின் அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (நி-6-250)



கிளிநொச்சி மாவட்டத்தில் அஸ்வெசும திட்ட பயனாளிகளில் அடையாள அட்டை இன்மையால் தமக்கான கொடுப்பனவுகளை பெறமுடியாதோர் மற்றும் 40 வயதுக்கு மேற்பட்ட பிறப்புச் சான்றிதழ் இல்லாதோருக்கும் அதனை பெற்றுக் கொடுப்பதற்கான விண்ணப்பங்களை பூர்த்தி செய்யும் பணிகள் கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மலையாளபுரம் கிராம சேவகர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. (படம் : யதுபாஸ்கரன்)

# போசாக்கு குறைபாடுடைய 160 இற்கும் அதிகமான சிறுவர்கள்

## கிளிநொச்சியில் கண்டறிவு

(கண்டாவளை)

கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் ஐந்து வயதிற்கும் குறைவான அதிகளவான சிறுவர் களிடையே போசாக்கு குறைபாடு காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பிரதேசத்தில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் களத் தரிசிப்புக்கள் மூலம் 160 இற்கும் மேற்பட்ட சிறுவர் களுக்கு போசாக்கு குறை பாடுகள் காணப்படுவதாக கண்டறியப்பட்டுள்ளது. (நி-6-315)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3132

### ராகுல்

நான் வெயில் காலத்தில கொஞ்சம் சுள்ளுனு அடிச்சா மட்டும் உனக்கு கசக்குது...




இப்போ மழை பெய்யும் போது, துணி காய வைக்க மட்டும் நான் வந்தா இனிக்குதோ

### விது

வீடு கட்டும் போது இருந்த வேகம் இப்பொழுது கடனை கட்டும் போது இல்லையே... ஏன்?



வீட்டை மேஸ்திரி,சித்தாள்,எலக்ட்ரிசியன், என பல பேர் சேர்ந்து கட்டினாங்க... கடனை நான் ஒருத்தன் மட்டும் தானே சார் கட்ட வேண்டியிருக்குது!!!

### மதுமிதா

ஏன்யா, எவ்வளவு கொழுப்பு இருந்தா என்னோட போன் நம்பரை covid 19 என்டு save பண்ணி வச்சிருப்ப



அடியே...! கவர்மெண்ட் தாண்டி சொல்லிச்சு, கொரோனாவோட சேர்ந்து வாழ பழகிக்கங்கன்னு...! அதான் இப்படி சேவ் பண்ணேன்...!

### காருஜா

வண்டிகளில் மெதுவாக செல்பவர்களை ஏளனமாகப் பார்க்காதீர்கள் அவர்கள் வாழ்வின் மதிப்பை உணர்ந்தவர்கள்.!!!



### மதுஷன்



பஞ்சு மிட்டாய் அஞ்சு ரூபாய் நீ பாதி தின்று தந்தால் லட்ச ரூபாய்



இரண்டரை ரூபாய் தானே வரும்

### சாலினி

அதிகாரம் செலுத்தும் இடத்தில் இருந்தாலும்... அன்பாய்ப் பேசுங்கள்...



யாருக்கும் எந்த நாற்காலியும் நிரந்தரம் இல்லை...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 496



இடியில்லை, மின்னல் இல்லை, மழையும் நின்று போயிருந்தது. எழுந்து கடற்கரைக்குச் சென்றாள். நேற்றிரவு போல் அவ்வளவு பெரிய அலைகள் இப்போது கடலில் அடிக்கவில்லை. ஆயினும் கடல் இன்னும் கொந்தளிப்பாகவே இருந்தது. முன்னாளிரவு சுழிக்காற்று அத்தீவை என்ன பாடுபடுத்தி விட்டது என்பதற்கு அறிகுறியான காட்சிகள் நாலா பக்கமும் காணப்பட்டன. வேருடன் பெயர்ந்து தரையில் விழுந்து கிடந்த மரங்களும், முடிகள் வளைந்து தாழ்ந்திருந்த நெடிய பெரிய மரங்களும் காட்சி அளித்துக் கொண்டிருந்தன.

பூங்குழலி அக்காட்சிகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தபோது கடலில் சற்றுத் தூரத்தில் ஒரு கட்டுமரம் மிதப்பது போல் தெரிந்தது. அது கடற்கரையோரத்து அலைகளினால் பல தடவை அப்படியும் இப்படியும் அலைந்த பிறகு கடைசியாகக் கரையில் வந்து ஒதுங்கியது. அப்போதுதான் அதிலே ஒரு மனிதன் இருப்பதைப் பூங்குழலி கவனித்தாள். ஓடிப் போய்ப் பார்த்தாள். கட்டுமரத்தில் கட்டப்பட்டிருந்த அந்த மனிதன் குற்றுயிராயிருந்தான். அவனைக் கட்டு அவிழ்த்து விட்டு ஆசுவாசப்படுத்தினாள். அவன் ஈழத்துக் கடற்கரைக் கிராமம் ஒன்றைச் சேர்ந்த வலைஞன். மீன் பிடிக்க போன இடத்தில் சுழிக்காற்றில் அகப்பட்டுக் கொண்டதாகக் கூறினான். தன்னுடன் இருந்த தோழனைக் கடல் இரையாக்கிக் கொண்டதாகவும் தான் பிழைத்தது புனர் ஜன்மம் என்றும் தெரிவித்தான். இன்னும் முக்கியமான ஒரு செய்தியையும் அவன் கூறினான்.

"முன்னிரவு நேரத்தில், கடுமையான சுழிக்காற்று அடித்துக் கொஞ்சம் நின்றது போலிருந்தது. எங்களைச் சுற்றிலும் காரிருள் சூழ்ந்திருந்தது. திடீரென்று ஒரு பேரிடி இடித்தது. அப்போது தோன்றிய மின்னல் வெளிச்சத்தில் இரண்டு மரக்கலங்கள் தெரிந்தன. ஒரு மரக்கலம் தீப்பிடித்து எரியத் தொடங்கியது. அந்தப் பயங்கரமான காட்சியைச் சிறிதுநேரம் பார்த்துக் கொண்டிருந்தோம். அதில் மனிதர்கள் அவசர நடமாட்டமும் தெரிந்தது. பிறகு தீப்பிடித்த கப்பல் கடலில் முழுகிவிட்டது. மற்றொரு மரக்கலம் இருட்டில் மறைந்து விட்டது!" என்று அம்மனிதன் தட்டுத் தடுமாறிக் கூறினான்.

இதைக் கேட்டவுடனே பூங்குழலிக்கு இளவரசரை ஏற்றிச் சென்ற கப்பல் அவற்றில் ஒன்றாயிருக்குமோ என்ற ஐயம் உதித்தது. அப்படி இருக்க முடியாது என்று நிச்சயம் அடைந்தாள். கடலில் எத்தனையோ கப்பல்கள் வந்து கொண்டும் போய்க்கொண்டும் இருக்கும். அதைப்பற்றி நமக்கு என்ன கவலை? ஆனாலும் தீப்பிடித்த கப்பலில் இருந்தவர்களில் சிலர் கடலில் விழுந்திருக்கக் கூடும். இந்தக் கட்டுமரத்து வலைஞனைப் போல் அவர்களில் யாராவது கையில் அகப்பட்டதைப் பிடித்துக் கொண்டு தத்தளிக்கக் கூடும். அவர்களுக்கு ஏன் நாம் உதவி செய்யக் கூடாது? படகில் ஏறிச் சென்று அப்படித் தத்தளிக்கிறவர்களை ஏற்றிக் கொண்டு வந்து ஏன் கரை சேர்க்கக் கூடாது? பின்னே, இந்த ஜன்மம் எதற்காகத் தான் இருக்கிறது?

அவ்வளவுதான் இந்த எண்ணம் தோன்றியதோ இல்லையோ, பூங்குழலி படகைக் கட்டவிழ்த்து நிமிர்த்திக் கடலில் தள்ளி விட்டாள். தானும் ஏறிக் கொண்டாள். அவளுடைய இரும்புக் கரங்களின் பலம் முழுவதையும் உபயோகித்துத் துடுப்பை வலித்தாள். கரையில் வந்து மோதிய அலைகளைத் தாண்டி அப்பால் போகும் வரையில் மிகக் கடினமான வேலையாயிருந்தது. அப்புறம் அவ்வளவு கஷ்டமாக இல்லை வழக்கம்போல் சர்வசாதாரணமாக அவளுடைய கரங்கள் துடுப்பை வலித்தன. படகு உல்லாசமாக ஆடிக் கொண்டு மெள்ள மெள்ள நகர்ந்து சென்றது. (தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## எத்தனுக்கு எத்தன்!

(நேற்றைய தொடர்ச்சி)

கசாப்புக் கடைக்காரன் அதிர்ச்சியில் நடுங்கினான். "இவன் நம்மைவிடக் கில்லாடியாக இருக்கிறானே!

எக்கச்சக் கமாக வாக்குக் கொடுத்து வசமாக மாட்டிக் கொண்டோமே! என்று மிகவும் பதறிப் போனான்.



"ஐயா! ஏதோ முட்டாள்தனமாக வாக்குக் கொடுத்து விட்டேன். மன்னித்துக் கொள்! என்று கெஞ்சினான்.

"சேச்சே.... நீ கூறுவது எதையும் என்னால் ஏற்றுக் கொள்ள முடியாது.

முதலில் தலைகளைக் கொண்டு வா! என்று கடுமையாகக் கூறினான் ஜனா.

அப்போதுதான் தான் காலையில் குதிரையை ஏமாற்றி வாங்கியது நினைவிற்கு வந்தது.

ஏமாந்தவனின் நண்பன் இவன் என்பதை புரிந்து கொண்டான். இவனிடம் தனது ஜம்பம் பலிக்காது என்பதைப் புரிந்து கொண்டான்.

"ஐயா! என்னை மன்னித்து விடுங்கள். வெளியூர்க்காரர் தானே என்று நினைத்து குதிரைக் காரரான உமது நண்பரை ஏமாற்றி விட்டேன்.

குதிரை யையும் சேணத்தில் இருந்த ஆயிரம் பொற் காசுகளையும் தந்து விடுகிறேன். என்னை இத்துடன் விட்டு விடுங்கள் என்று மன்றாடினான்.

சரியெனச் சம்மதித்து குதிரை மற்றும் பணப்பையுடன் ஜனா சத்திரத்திற்குத் திரும்பினான். நண்பனின் ஆற்றலை எண்ணி வியந்தான்,

தானும் ஜனாவைப் போல் புத்திச்சாலியாக மாறத் தீர்மானித்தான் சுருதி.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல குடும்பத்தைப் போன்ற பள்ளிக்கூடம் வேறில்லை. ஒழுக்கமிக்க பெற்றோர்களைப் போன்ற ஆசிரியர்களும் இல்லை. - மகாத்மா காந்தி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பரீட்சைப் பெறுபேறு கிடைத்த மாணவர்களை வழிப்படுத்துங்கள்

2023ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு நேற்றைய தினம் (31) வெளியாகியுள்ளது.

பரீட்சைப் பெறுபேறுகள் குறிப்பிட்ட மாணவர்களுக்குத் திருப்தியாக அமைந்திருக்கும். ஏனைய மாணவர்கள் ஏதோவொரு மனக்குறையை பெறுபேற்றில் கண்டிருப்பர்.

இந்நிலைமை அந்த மாணவர்களுக்கு மனவேதனையை ஏற்படுத்தலாம்.

இங்குதான் அந்த மாணவர்களை ஆற்றுப்படுத்தி வழிப்படுத்துகின்ற பணியை பெற்றோர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள் செய்தாக வேண்டும்.

சில சந்தர்ப்பங்களில் மீளவும் பரீட்சைக்குத் தோற்றுமாறு ஆலோசனை கூறுவது அவசியமாக இருக்கும்.

எது எவ்வாறாயினும் பரீட்சைப் பெறுபேறுகள் மாணவர்களுக்கு மனச்சோர்வை ஏற்படுத்திவிடக்கூடாது என்பதிலேயே நாம் அனைவரும் விழிப்பாக இருக்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக பெற்றோர்கள், ஆசிரியர்கள் இதுவிடயத்தில் மாணவர்களுக்குப் பக்கதுணையாக இருந்து அவர்களை வழிப்படுத்த வேண்டும்.

பொதுவில் பரீட்சைப் பெறுபேறுகள் திருப்தியாக இல்லாதவிடத்தில், சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு வீடுகளில் தொந்தரவு கொடுக்கப்படுவது வழமை.

இதனால் அந்த மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகுகின்ற நிலைமைகளும் நிறையவே உண்டு.

ஆக, இங்கு ஒரு விடயத்தை நாம் அனைவரும் முதற்கண் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதாவது பரீட்சைப் பெறுபேறு திருப்தியாக இல்லை என்பது சம்பந்தப்பட்ட மாணவரின் வாழ்க்கையில் ஏற்பட்ட தோல்வி என்று எவரும் கருதிவிடக்கூடாது.

மாறாக, பிரஸ்தாப மாணவர் எடுத்த பெறுபேற்றின் அடிப்படையில் அவர் மேற்கொண்டு கற்றல் நடவடிக்கைகளில் - தொழில்சார் பயிற்சிகளில் ஈடுபடுவதற்கான வழிவாய்க்கால்களை காட்டிக்கொடுத்து அவர்களை வழிப்படுத்துவதிலேயே அந்த மாணவரின் எதிர்காலம் தங்கியுள்ளது.

ஆம், இப்போது பட்டப்படிப்புக்கான வாய்ப்புகள் நிறையவே உண்டு. அங்கீகரிக்கப்பட்ட எத்தனையோ கற்கைநெறிகள் நம் நாட்டில் உள்ளன.

இருந்தும் அதுபற்றிய விபரங்களை நம் மாணவர்கள் தெரிந்து கொள்ளவுமில்லை நாம் அவர்களுக்கு அவற்றைப் பற்றித் தெரியப்படுத்தவுமில்லை.

எனவே உயர்தரப் பரீட்சைப் பெறுபேறு வெளியாகி இருக்கக்கூடிய இந்தநேரத்தில், அந்த மாணவர்கள் பட்டப்படிப்புக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பது தொடக்கம் வெளிநாட்டுப் புலமைப்பரிசில்களைப் பெறுதல், பொருத்தமான கற்கைநெறிகளைத் தெரிவு செய்தல், இருக்கக்கூடிய அனைத்து வாய்ப்புகளையும் பயன்படுத்துதல் பற்றி நாம் அவர்களுக்கு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குவது மிக மிக அவசியமானதாகும்.

# நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் அரசு நம்பிக்கையான இலக்கைக் கொண்டுள்ளது

## நிதி இராஜாங்க அமைச்சர்

நாட்டை மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளவேண்டும்என நினைப்பவர்களே பொருளாதார மாற்றச் சட்டமூலத்தை எதிர்ப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் தற்போதைய அரசாங்கம் நம்பிக்கையான இலக்கைக் கொண்டுள்ளது. ஆனால் எதிர்க்கட்சிகள் அரசியல் நோக்கத்தை மாத்திரம் கருத்தில் கொண்டுள்ளன. பொருளாதார மாற்ற சட்டமூலத்தின் ஊடாக உற்பத்தித்திறனை அதிகரித்து ஒவ்வொரு பிரஜைக்கும் சமவாய்ப்புள்ள நாடாக இலங்கையை மாற்றுவதே எமது எதிர்பார்ப்பாகும்.

மேலும் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளைக் கொண்ட நாட்டை உருவாக்கவும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது. பொருளாதார வளர்ச்சிக்கு இணைந்த வகையில் தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதுடன், புத்தாக்கத்துடன் கூடிய ஏற்றுமதி விரிவாக்கப்பட்ட போட்டிச் சந்தையை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் இந்தச் சட்டமூலம் பற்றி அறியாதவர்கள் பல்வேறு கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். நாட்டை மீண்டும் பொருளாதார நெருக்கடிக்குள் தள்ள வேண்டிய தேவை உள்ள தரப்பினர்களால் மாத்திரமே பொருளாதார மாற்ற சட்டமூலத்தை எதிர்க்க முடியும்.

எமது நாட்டில் இலக்குமயப்பட்ட சட்டக் கட்டமைப்பு நடைமுறைப்படுத்தப்படாமையே, பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுத்தது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

அதிலிருந்து நாம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் பொருளாதார பரிமாற்ற சட்டமூலத்தின் படி, ஏற்கனவே உள்ள சட்டத்திற்கு உட்பட்ட இலக்குமயப்பட்ட வேலைத் திட்டத்திற்கு தேவையான மறுசீரமைப்புகள் மற்றும் வேலைத்திட்டங்களை செயல்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பாகவுள்ளது.

நாம் அவற்றைத் தயக்கமின்றி நிறைவேற்றுவோம் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க மேலும் தெரிவித்துள்ளார். (ம-7,10)

# திருக்கோணேச்சர புனிதத்தையும் அபிவிருத்தியையும் பேண கிழக்கு ஆளுநர் அக்கறை எடுக்க வேண்டும்

## கலாநிதி ஆறு. திருமுருகன் வேண்டுகோள்

திருக்கோணேச்சர புனிதத்தையும் அபிவிருத்தியையும் பேணுவதில் கிழக்கு மாகாண ஆளுநர் உடன் அக்கறை எடுத்தல் வேண்டும் என அகில இலங்கை இந்துமாமன்றத்தின் உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பில்,

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சைவத் தமிழர்களின் தலையாய கோவிலாகிய திருக்கோணேச்சரத்தைப் பாதுகாப்பதில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் அவர்கள் உடனடி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

திருக்கோணேச்சரத்துக்குச் செல்லும் பாதையில் இரு மருங்கிலும் அமைக்கப்பட்டுள்ள பெட்டிக் கடைகளை அவ்விடத்தில் இருந்து நீக்கி அவர்களுக்கு மாற்று ஒழுங்கு செய்யவும்.

கோணேச்சரத்துக்கு செல்லும் பக்தர்களின் புனித வழிபாட்டுக்கு உரிய சூழ் நிலையை ஏற்படுத்த வேண்டும்.

திருக்கோணேச்சரத் திருப்பணிக்கு தொல்லியல் திணைக்களம் பல்வேறு இடையூறுகளைச் செய்து வந்துள்ளது. இவ்விடையூறுகளை நிறுத்தி திருக்கோணேச்சரத்தின் பாரிய திருப்பணிகளை முன்னெடுப்பதற்கு ஏற்பாடு செய்து உதவுங்கள்.

திருக்கோணேச்சர புனித தீர்த்தமாகிய பாபநாசம் தீர்த்தக்கரையை புனருத்தாரணம் செய்து பொதுமக்கள் அவ்விடத்தில் தமது கடமைகளைச் செய்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள்.

திருக்கேதீச்சர ஆலயத்தை இந்திய அரசு கருங்கற் கோயிலாக புனர்நிர்மாணம் செய்தது போல் திருக்கோணேச்சரத்தையும் அழகாக நிர்மாணிப்பதற்கு இந்திய அரசிடம் வேண்டுதல் விடுவிக்கப்பட்டது. அவர்கள் அக்கறையாக இருப்பதாக தகவல்கள் திரட்டினார்கள். ஆனால் இது வரை எவ்வித நடவடிக்கையும்எடுக்கப்படவில்லை.

மேற்படி விடயங்கள் தொடர்பாக மதிப்பார்ந்த ஆளுநர் அவர்களே துரித நடவடிக்கை எடுத்து உதவுமாறு நன்றியோடு வேண்டுகிறோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,10)

# அரசுடன் இணைந்து கொள்ளுமாறு தமக்கு அழைப்பு விடப்பட்டுள்ளது

## விமல் வீரவன்ச எம்.பி

அரசாங்கத்துடன்இணைந்து கொள்ளுமாறு தமக்கு அழைப்பு விடுக்கப்படுவதாகவும்அரசாங்கத்துடன்இணைந்து கொண்டால்முக்கியமான அமைச்சுப் பதவியைக் கூட பெற்றுக்கொள்ளும் திறமை தனக்கு இருப்பதாகவும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

அரசியல்நிகழ்ச்சிஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன் எதிர்க்கட்சிகளும் தம்மைத் தம்முடன் இணைத்துக்கொள்ளுமாறு அழைப்பு விடுத்துள்ளதாகவும், தாங்கள் இணைந்தாலும் உயர் பதவியைப் பெற முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், எல்லோரும் ஒரே சித்தாந்தத்தை தான் கடைப்பிடிக்கிறார்களே தவிர, அரசியல் லாபத்திற்காக தனது சித்தாந்தங்களை மாற்றத் தயாராக இல்லை என்று அவர் தெரிவித்தார்.

ஆனால், தற்போது அரசியல் ரீதியாக எவ்வளவு மோசமான நிலை ஏற்பட்டாலும், அதேபோன்று தனது சித்தாந்தத்தைப் பேணிக்காக்க தாம் செயற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-7,10)

# மே - மாதத்தில் பணவீக்கம் வீழ்ச்சி

(கொழும்பு)

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் மே மாதத்தில் வீழ்ச்சியடைந்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத்திணைக்களம் நேற்று (31) வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கடந்த ஏப்ரல் மாதத்தில் 1.5 சதவீதமாகக் காணப்பட்ட தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் அடிப்படையிலான முதன்மைப் பணவீக்கம் மே மாதத்தில் 0.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அத்துடன் ஏப்ரல் மாதத்தில் 3.3 சதவீதமாகக் காணப்பட்ட உணவுப் பணவீக்கம் மே மாதத்தில் 0.0 சதவீதமாகப் பதிவாகியுள்ளது.

அதேநேரம், கடந்த ஏப்ரல் மாதத்தில் 2.3 சதவீதமாகக் காணப்பட்ட உணவல்லாப் பணவீக்கம் மே மாதத்தில் 1.3 சதவீதமாக பதிவாகியுள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-7,10)

# பருத்தித்துறை

## நீதிமன்ற வளாகத்தில் தங்க ஆபரணம் கண்டெடுப்பு

பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற வளாகத்தில் தங்க ஆபரணம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு தினங்களுக்கு முன்னர் நீதிமன்ற வளாகத்தில் மேற்படி தங்க ஆபரணம் கண்டெடுக்கப்பட்டு நீதிமன்ற காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேற்படி தங்க ஆபரணத்தைத் தவறவிட்டவர் தகுந்த ஆதாரத்தைக் காட்டி நீதிமன்ற பதிவாளர் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது. (ம-7,10,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## ஆங்கிலேயர் ஆட்சிக் கால நடுப்பகுதி – பகுதி V

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

04

மேலும் அவ்வாண்டில் பொலிஸ் நீதிமன்றங்களும், 1845 இல் முறையீட்டு மன்றங்களும் அமைக்கப்பட்டன. அடிமை முறையும் அவ்வாண்டு நீக்கப்பட்டது. 1846 இல் அவர், கொழும்பு-கண்டி புகையிரத வீதியை அமைப்பது பற்றி யோசனை செய்யும் பொருட்டு ஒரு சங்கத்தை நிறுவினார்.

அவர் 1846 இல், தெரு வீதிகளின் ஓரங்களில் உள்ள வீடுகளின் விறாந்தைகள், தெருக்களில் தடைகளை ஏற்படுத்தும் பட்சத்தில், நட்ட ஈடின்றி அகற்றப்பட வேண்டுமென்ற சட்டத்தை இயற்றினர். இச்சட்டம், பறங்கியரையும் சுதேச மக்களையும் பாதித்ததினால், அவர்கள் அதற்கெதிராக ஓர் எதிர்ப்பியக்கத்தை ஆரம்பித்தனர்.

**பாராளுமன்ற ஆட்சிமுறையினை நோக்கி இலங்கை....**

சட்ட நிரூபண சபையும் சட்ட நிர்வாக சபையும் (சட்டக் கழகமும் நிர்வாகக் கழகமும்)

சேர் வில்மட் ஹோட்டன் 1833 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வெளியிட்ட அரச கட்டளையின்படி, பழைய ஆய்வுரைக் கழகம் கலைக்கப்பட்டு, வரவு-செலவுகளைப் பங்கீடு செய்யும் அதிகாரமும், புதுச் சட்டங்களை இயற்றும் அதிகாரமும் புதிதாக நிறுவப்பட இருந்த சட்டக் கழகத்தின் ஆணையின் கீழ் விடப்பட்டன.

நிர்வாக அதிகாரம் ஆள்பதியினதும், நிர்வாகக் கழகத்தினதும் கைகளில் ஒப்படைக்கப்பட்டது. நிர்வாகக் கழகம், குடியேற்றச் செயலாளன், குடியேற்றப் பொருளாளன், முடிக்குரிய வழக்கறிஞன், மேல் மாகாண அரசாங்க முகவர் எனும் அறுவரைக் கொண்டு அமைக்கப் பெற்றது.

சட்டக் கழகம், ஒன்பது உத்தியோகப்பற்றுள்ள உறுப்பினரையும் ஆறு உத்தியோகப்பற்றற்ற அங்கத்தினரையும் கொண்டிருத்தல் வேண்டும் என்றும், அப்பதினைந்து உறுப்பினரும் ஆள்பதியினால் நியமிக்கப்படுவரென்றும் விதிக்கப்பட்டது.

நிர்வாகக் கழக உறுப்பினர் அறுவருடன் உத்தியோகப் பற்றுள்ளவர்கள் மூவர், சட்டசபையின் உறுப்பினராயினர். உத்தியோகப் பற்றற்ற அறுவரில் மூவரை பிரித்தானிய தோட்டத் துறையினரினதும் வர்த்தக முதலாளிகளினதும், நலனைகளைப் பாதுகாப்பதற்காக ஆள்பதி நியமித்தார். மற்றைய மூவரும் இந் நாட்டின் நிரந்தரப் பிரஜைகளுக்காகப் பிரதிநிதித்துவம் பெற்றனர். இப்பதினைந்து சட்டசபை உறுப்பினரும் சீவிய காலத்துக்கென நியமிக்கப்பட்டார்கள்.

இவ்விரு கழகங்கள் நிறுவப்பட்டதனால் ஆள்பதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டன என்று எண்ணுதலாகாது. அவருக்கு ஏற்கனவே இருந்த அதிகாரங்கள் புதுத் திட்டத்தின் கீழும் பாதுகாத்துக் கொடுக்கப்பட்டன. சட்டக் கழகத்தின் தலைவராக விளங்கிய ஆள்பதி, சட்டங்களை எடுத்தாளவும் தாம் விரும்பிய நேரத்தில் விவாதத்தை நிறுத்தவும் அதிகாரம் பெற்றிருந்தார்.

உத்தியோகப் பற்றுள்ள உறுப்பினரின் ஆதரவைக் கொண்டு தானிட்ட திட்டத்தை நிறைவேற்ற அவருக்குப் போதிய வாய்ப்பிருந்தது. ஆள்பதி, சட்டக் கழகத்தின் எண்ணப்படி தான் நடக்கவேண்டும் என்ற நியதி அவருக்கு விதிக்கப்படவில்லை.

இதற்கு எதிர்மாறாக கழகம் செய்யும் தீர்மானமொன்றை நிராகரிக்க அவருக்கு அதிகாரம் இருந்தது. அவ்விதம் செய்யின் அவர் அதற்குரிய காரணத்தைக் குடியேற்ற நாட்டுச் செயலாளனுக்கு விளக்க வேண்டுமென ஏற்பட்டிருந்தது.

மேற்கூறப்பட்டவற்றிலிருந்து இலங்கையில் அமைவுபெற்ற முதற் சட்டக் கழகம், ஓர் ஆய்வுரைக் கழகமாக மாத்திரம் விளங்கியதேயன்றி உண்மை அரசியல் அதிகாரம் படைத்த ஒரு சபையாக விளங்கவில்லை என்பது வெளிப்படை.

தீவில் உள்ள பல்வேறு சாகியத்தினரினதும் தொழில் துறையாளரினதும் பிரதிநிதிகள் மூலம் "வர்த்தகர், தோட்டத் துறைமார், சுதேசிகள் ஆகியவர்களின் தேவைகளை அறிய" ஆள்பதிக்குத் துணை செய்வதே, இக்கழகத்தின் நோக்கமாயமைந்தது.

சட்டக் கழகத்துக்கு மிகவும் கட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்கள் மாத்திரமே வழங்கப்பட்டன. ஆள்பதியும் நிர்வாகக் கழகமும் இயற்றி, சட்டசபையின் ஆய்வுரைக்கென சமர்ப்பித்த சட்டதிட்டங்களைக் கண்டிக்கவும், சட்டங்களில் திருத்தங்களை ஏற்படுத்தவும் அதற்கு அதிகாரமிருந்தது. ஆனால் புதுச் சட்டங்களை எடுத்தாள அதற்கு உரிமையிருக்கவில்லை.

புதுச் சட்டக் கழகத்தின் முதற் கூட்டம் 1834 மே மாதம் 22 ஆம் நாள் கொழும்பில் நடந்தது. ஆனால் அப்பொழுது உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர் ஆள்பதியினால் நியமிக்கப்படவில்லை கழகத்தின் மூன்றாவது கூட்டத்தில் தான் அவ்விடங்கள் நிரப்பப்பெற்றன.

இலங்கை மக்கள் சார்பில் முதன் முதல் நியமனம் பெற்ற உத்தியோகப் பற்றற்ற உறுப்பினர், G.P. பண்டித்தரட்ன, G.ஹில்டபிரான்ட், A.குமாரசாமிப்பிள்ளை என்ற மூவராவர்.

A.குமாரசாமிப்பிள்ளை, சேர் பொன். இராமநாதனின் தாய் வழிப் பாட்டனர் ஆவர். அவர் 1838 இல் மறைந்த பொழுது, கற்பிட்டியைச் சார்ந்த சைமன் காசிச் செட்டி சட்டசபையின் உத்தியோகப்பற்றற்ற தமிழ் உறுப்பினராக நியமிக்கப்பட்டார். அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை மிகுந்தவராகக் காணப்பட்டார்.

"தமிழ்ப் புலவர் வரலாறு" எனும் நூலை ஆக்கியவர் அவரே. அவரையடுத்து எதிர் மன்னசிங்க முதலியார் சட்டசபை உறுப்பினராக விளங்கினர். இவருக்குப்பின் சேர். முத்துக்குமாரசாமி அவ்விடத்துக்கு நியமிக்கப்பட்டார். அவர் ஆனந்த குமாரசாமி எனும் பெருந்தகையின் தந்தையும் இராமநாதனின் தாய் மாமனுமாவார். ஆசியாவில் "சேர்" பட்டம் பெற்ற முதல்வர் அவரேயாவர்.

**சட்ட, நிர்வாகக் கழகங்களின் சீர்திருத்தங்கள் பற்றி ஐரோப்பியரும் பறங்கியரும்**

1833 ஆம் ஆண்டின் அரசியற்றிட்டம், இலங்கையில் பாராளுமன்ற ஆட்சிமுறையினை முதன் முதலாக ஆரம்பித்து வைத்தது. இலங்கை வாழ் மக்கள், ஆங்கிலேரின் பரிபாலன முறைகளைப் பற்றி ஒன்றுமே அறியாத பட்சத்தில், சட்ட, நிர்வாகக் கழகங்களின் சீர் திருத்தத்திற்கான கிளர்ச்சியை ஆரம்பித்து நடாத்தியவர்கள் ஐரோப்பியரும் பறங்கியருமாவர்.

சட்டக் கழகத்தின் ஆரம்பந் தொட்டு உத்தியோகப்பற்றற்ற உறுப்பினர், தமது சட்டமியற்றும் அதிகாரங்கள் கட்டுப்படுத்தப்பட்டமையையும், வரவு-செலவுகளின் மேல் எவ்வித அதிகாரம் வழங்கப்படமாற் போனமையையும், வன்மையாகக் கண்டித்து வந்தனர்.

கோப்பிச் செய்கையின் விருத்தியுடன் ஐரோப்பியரின் எண்ணிக்கை விரைவில் அதிகரித்தது. பிரித்தானிய பாராளுமன்ற முறையில் பழக்கமுடைய ஐரோப்பிய தோட்டத் துறைமாரும் வர்த்தகரும் இங்குற்ற பொழுது தாயகத்தில் தாம் அனுபவித்த அரசியல் உரிமைகளையும், சலுகைகளையும் இங்கும் பெற எதிர்பார்த்தமை இயற்கையே.

ஆனால் அவர்கள் தமக்கோ, சுதேசிகளுக்கோ தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவம் கொடுபடாமை, சட்டமியற்றும் அதிகாரம் மறுக்கப்பட்டமை, நிதிப் பங்கீட்டில் எவ்வித அதிகாரமும் இல்லாமை எனும் அம்சங்களைக் கண்டித்தனர்.

நிர்வாகத்துக்குப் பொறுப்பாயிருந்த உத்தியோகத்தரின் பரிபாலன முறைக்கும், அவர்கள் பலமான எதிர்ப்புக் காட்டினர். புதுச் சட்டசபை மூவித அடிப்படைகளில் சீர்திருத்தப்பட வேண்டுமென வாதாடினர்.

முதலாவது சட்டசபைக்கு ஆள்பதி உறுப்பினரை நியமனம் செய்யும் முறையினை வன்மையாகக் கண்டித்தனர். ஏனெனில் நியமிக்கப்பட்ட அங்கத்தவர்கள், எஞ்ஞான்றும் ஆள்பதியின் கைப் பொம்மைபோல் இருப்பரேயன்றி, தம் சமூகத்துக்கு எவ்வித நன்மையும் செய்ய முடியாதெனச் சுட்டிக் காட்டினர். நியமனத்துக்குப் பதிலாக அவர்கள் தமது பிரதிநிதிகளைத் தாமே தெரிவு செய்யும் உரிமை வேண்டுமென வற்புறுத்தினர்

இரண்டாவது, தமது நல உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வேண்டிய சட்டதிட்டங்களை சட்டக் கழகத்தின் வழியாகவே நிறைவேற்ற வேண்டுமெனக் கண்ட ஐரோப்பியர், சட்டக் கழகத்தில் உத்தியோகப் பற்றில்லாத உறுப்பினரே பெரும்பான்மையினராக இருக்க வேண்டுமென வாதாடினர்.

மூன்றாவதாக அவர்கள் சட்ட சபையில் சட்டங்களை எடுத்தாள அதிகாரமும், அரசாங்கத்தின் செலவீனங்களைப் பங்கீடு செய்யும் முறையினைத் தீர்மானிக்க உரிமையும் தரப்பட வேண்டுமென வாதாடினர்.

1840இற்குப் பின்னர் ஐரோப்பியரின் அரசியல் ஈடுபாடு கோப்பித் தோட்டங்களுக்குத் தெருக்களையும், புகையிரத வீதிகளையும் அமைப்பதன் இன்றியமையாமையை வற்புறுத்துவதுடன் நின்றுவிட்டது.

அரசாங்கம் புதுப் பாதைகளை அமைப்பதற்குப் போதிய பணத்தை ஒதுக்கி, அதில் சிரத்தை காட்டிய ஆண்டுகளில் சட்டசபைச் சீர்திருத்த இயக்கம் தணிந்தது. ஒதுக்கப்பட்ட பணம் குறைந்த ஆண்டுகளில், ஐரோப்பியரின் கிளர்ச்சி மிகவும் வலுப் பெற்றது. இவ்விதமாக 1850 வரை அரசியற் கிளர்ச்சி பெரும்பாலும் கோப்பித் தோட்டங்களின் தேவைகளினலேயே வரையறுக்கப்பட்டது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## க.பொ.த...

2023 ஆம் ஆண்டிற்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை கடந்த ஜனவரி மாதம் இடம்பெற்றிருந்த நிலையில் 346,976 பரீட்சார்த்திகள் நாடு முழுவ

நாக அமுத சுரபி
கனகலிங்கம் திலகவதி
NLB, DLB
நான்கு தினங்களில் கனகலிங்கம் திலகவதி முகவர் ஊடாக வெல்லப்பட்ட பரிசுகள் (29-30வரை)
சனிதா - 100,000, 200,000
ராசி - 50,000, 20,000 (8)
சுபிரி தன சம்பத - 100,000, 20,000 (7)
அதசம்பத - 1st பரிசு 250,000
2nd பரிசு 50,000
நீங்களும் விரையுங்கள் கனகலிங்கம் திலகவதி லொத்தர் கூடுகளை
மேலதிக விபரங்களுக்கு
கனகலிங்கம் திலகவதி NLB, DLB (Facebook)
(1043)
நயினையில் தொடரும் அமுத சுரபி
யாழில் தொடரும் அதிஷ்ட சுரபி
077 603 1723

மஹஜன சம்பத
திகதி 2024.05.31
சீட்டிழுப்பு இலக்கம் 5490
E 5 9 7 1 4 5
அத சம்பத
E 7 1 4 5
சீட்டிழுப்பு இலக்கம் 65
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.05.31
சீட்டிழுப்பு இலக்கம் - 1520
M 06 23 28 53 M
Double Chance 41125

மெகா பவர்
திகதி 31/05/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1838
O 12 14 18 66 69
Double Chance 69964

லக்கி 7 VIP
திகதி 2024.05.31
சீட்டிழுப்பு இலக்கம் 316
W 3 3 1 3 1 3 W

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3732
சீட்டிழுப்பு திகதி 31.05.2024
T 01 09 13 24
T 52243
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.05.31
சீட்டிழுப்பு இலக்கம் 0799
கன்னி 14 26 46 58 கன்னி
55102

திலும் இருந்து தோற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,10)

## நல்லூரடியில்...

ஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,10)

## அதிகாரப்...

தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான மனித உரிமை குற்றச்சாட்டுகள் நல்லிணக்க முயற்சிகள் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர், பிரஜைகளின் மனித உரிமையை மேம்படுத்துவதற்கான நாட்டின் அர்ப்பணிப்பை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

தங்கள் அன்புக்குரியவர்கள் காணாமல்போயுள்ளதாக தெரிவித்துள்ள 6700 பேரின் வேதனையை ஏற்றுக்கொண்டுள்ள அவர் இலங்கையில் நல்லிணக்கத்திற்கு ஏற்ற பொருத்தமான சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

புலம்பெயர் தமிழர்கள் அரசியல் நிகழ்ச்சி நிரலை தவிர்க்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள அலி சப்ரி நாட்டின் வடகிழக்கிற்கான அதிகாரப்பகிர்வு மற்றும் அபிவிருத்தியின் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ளார். (ம-7,10)

## யாழ்.இந்து...

மாணவர்கள் கலைப் பிரிவிலும் 2 மாணவர்கள் வர்த்தகப் பிரிவிலும் "3ஏ" சித்தி களை பெற்றுள்ளனர்

அதேவேளை யாழ்.வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் 30 மாணவிகள் "3ஏ" தரச் சித்தியினை பெற்று சாதனை படைத்துள்ளனர். (ம-7,10,33)

## எரிபொருட்களின்...

பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 355 ரூபாயாக நிர்ணயிக்கப்பட வுள்ளது.

ஓட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 16 ரூபாயினால் குறைக்கப்பட வுள்ளது.

நள்ளிரவு முதல் ஒரு லீற்றர் ஓட்டோ டீசல் 317 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது.

மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 13 ரூபாயினால் குறைக்கப்பட வுள்ளது.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 202 ரூபாயுக்கு விற்பனை செய்யப்படவுள்ளது. (ம-7,10)

## மீசாலை வீரசிங்...

வன் மதியழகன் டினோஜன் முதலிடம் பெற்று சாதனை படைத் துள்ளார்.

கலைப்பிரிவில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாட சாலையின் மாணவி வஜினா பாலகிருஷ்ணன் மாவட்ட ரீதியில் முதலாமிடத்தையும் பெற்றுள்ளார்.

இதேவேளை பருத்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்களான ஜெயசீலன் சுமன் உயிர்முறை தொழில் நுட்பப் பிரிவிலும் செல்வச்சந்திரன் ஶ்ரீராம் பொறியியல் தொழில்நுட்பப் பிரிவிலும் மாவட்டரீதியில் முதலிடத்தையும் நாடளாவிய ரீதியில் 10ம் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர். (ம-7,10,33)

## வடக்கில்...

வெளியாகியுள்ள உயர்தர பரீட்சை முடிவுகளின் படி வடக்கில் மாவட்ட ரீதியில் சிறந்த பெறுபேறுகள் பெற்றவர்கள் விபரம் வருமாறு,

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு மகா வித்தியாலய மாணவன் லிதுசனன் முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரியல் பிரிவில் முதலாம் இடத்தினை பெற்றுள்ள அதேவேளை புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மாணவி இரவீந்திரராசா பிருந்தா வர்த்தக பிரிவில் முதலாம் இடத்தையும், பொறியியல் தொழில்நுட்ப பிரிவில் முதலாம் இடத்தை முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மாணவன் சுரேஸ்குமார் மதுசுதனும் பெற்றுள்ளனர்.

முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி மாணவி செல்வரத்தினம் ஹம்சிகா முல்லைத்தீவு மாவட்டத்தில் கலைப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

மேலும் கிளிநொச்சி மாவட்டத்தில் கணிதப் பிரிவில் வட்டக்கச்சி மத்திய கல்லூரி மாணவன் சிவகுமாரன் முதலிடம் பெற்றுள்ளார்.

மேலும் உயிரியல் பிரிவில் கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவி மணிவண்ணன் துஷாகா முதலிடம் பெற்றுள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய மாணவர்களான ஆ. ஜிலோட்சன் கணிதப் பிரிவில் முதலாம் இடத்தினை பெற்றுள்ளதோடு பொறியியல் தொழில் நுட்பப் பிரிவில் முதலாம் இடத்தினை கமலநாதன் லோகநாதன் பெற்றுள்ளார். (ம-7,10)

## தேசிய...

வில் அகில இலங்கை ரீதியில் முதலிடத்தை காலி சங்கமித்த மகளிர் வித்தியாலயத்தைச் சேர்ந்த பஹன்மா உபனி லெனோரா பெற்றுள்ளார்.

அதேபோல், கணிதப் பிரிவில் கொழும்பு ஆனந்தா கல்லூரியை சேர்ந்த சிராத் நிரோத முதலிடம் பெற்றுள்ளார். (ம-7,10)

ஐ.எஸ்ஸுடன் தொடர்பு

# கொழும்பில் ஒருவர் கைது

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்புடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் இந்தியாவில் கைது செய்யப்பட்ட நான்கு இலங்கையர்களுடன் நெருங்கிய தொடர்புகளை வைத்திருந்ததாகவும் அவர்களுக்கு உதவியதாகவும் சந்தேகிக்கப்படும் ஒஸ்மான் புஷ்பராஜ் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் பயங்கரவாத புலனாய்வு திணைக்களத்தின் கூட்டு நடவடிக்கையில் கொழும்பில் வைத்து கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் டிஐஜி, சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். (ம-7,10)

கலைப் பிரிவில் காலி ரிச்மண்ட் கல்லூரியைச் சேர்ந்த தசுன் ரித்மிக விதானகே முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். (ம-7,10)

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி தன சம்பத
31.05.2024 வெற்றி வாரம் 198
W 0 6 5 0 1 1
F 39962
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,128,852.00
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2464 வர்ணம் இளஞ்சிவப்பு திகதி 31.05.2024 தினம் வெள்ளி
13 17 70 73 Z
43050
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 90,943,955.20
DLB

சனிதா
திகதி 2024.05.31 வெற்றி வாரம் 4625 வர்ணம் செம்மஞ்சள்
16 19 39 64 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,265,961.20
77037
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 483
சீட்டிழுப்பு திகதி 2024.05.31
பச்சை
05 32 39
07
ரூ 2,981,320/-
64121
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4176 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.05.31 தினம் வெள்ளிக்கிழமை
03 28 44 48 மேடம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,434,181.60
676518
DLB

ஜயோதா
P 27 10 32 34 45
1640
389698
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 525,209,779.80
31.05.2024 வெள்ளி
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம்: 2290
சீட்டிழுப்பு திகதி: 2024.05.31
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 116,686,248.80
அத கோடிபதி ADA KOTIPATHI
02 10 35 40 D
633464
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0501)

உடனடி வேலை வாய்ப்புக்கள்
EXECUTIVE OFFICER
✓ சம்பளம் - 25000 /= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது) (C-0501)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து
உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

# 190 பேரின் பரீட்சை பெறுபேறு இடைநிறுத்தம்

2023ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் நேற்று வெளியாகின.

இதில், பரீட்சைக்குத் தோற்றியவர்களில் 190 பேரின் பரீட்சைப் பெறுபேறுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

146 பாடசாலை பரீட்சாத்திகள், 44 தனியார் பரீட்சாத்திகளின் பெறுபேறுகளே இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளதாக குறித்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7.10)

செஞ்சொற்செல்வர்
கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களின்
(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)
63வது பிறந்தநாள் குறித்து அறநிதியச் சபை நடாத்தும்
## இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது வழங்கும் வைபவம்

காலம் : 02.06.2024 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : காலை 9.00 மணி
இடம் : அன்னபூரணி மண்டபம், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.

இளைய தலைமுறை ஆற்றலாளர் விருது பெறுவோர்

பலரது உயிரைக் காக்கும் மருத்துவர்
இருதய சத்திர சிகிச்சை நிபுணர்.
ஞானச்சந்திரமூர்த்தி காந்திஜி அவர்கள்
லங்கா வைத்தியசாலை, கொழும்பு.

பாக்கு நீரிணையை நீந்திக் கடந்த சாதனையாளர்
செல்வன் ஹரிகரன் தன்வந்த் அவர்கள்
மாணவன், திருகோணமலை இந்துக் கல்லூரி.

மதியம் 12.00 மணி
நன்றியுரை : திரு.ப.சேயோன் அவர்கள்
உப பொருளாளர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.
பகல் 12.30 மணி : மதிய போசனம்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் பிறந்தநாள் அறநிதியச் சபை, ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.
(1038)

வங்கி மீதி வசதி
(Show money)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக் கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 17 37 684
(1035)

# பெறுபேறு மீள்திருத்த விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டு கல்வி பொதுத் தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகள் நேற்று வெளியிடப்பட்டன.

பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தள முகவரிக்குள் பிரவேசித்து பரீட்சை பெறுபேறுகளை மாணவர்கள் அறிந்துகொள்ள முடியும்.

இதேவேளை, பரீட்சை மீளாய்வுகளுக்காக எதிர்வரும் 05 ஆம் திகதி தொடக்கம் 19 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியுமென பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது. (ம-7.10)

அரிசி, தானியங்களை அரைப்பவர்களுக்கு
இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட 10" மற்றும் 12" கிறைண்டர். 230Kg எடை கொண்டதும் உதறல்கள் அற்றதுமான, இந்தியன் மோட்டார் 5 HP மற்றும் 7.5 HP இல் இயங்கக்கூடிய புலட் மொடல் (மட்டை வைக்கத் தேவையில்லை) கிறைண்டர் உத்தரவாதத்துடன் இப்பொழுது எம்மிடம்.
"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"
ஆர்க் . என் . கம்பனி
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்
021 222 4021
A-9 வீதி, எழுதுமட்டுவாள்.
070 191 3571
A-9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன்.
021 228 2020

Hotline : 071 535 7799/ 071 973 9917
(1042)

Techna
Technical Institute
## A/L தொழினுட்பப்பிரிவு
A/L 2023 (2024) உயர்தரப் பரீட்சையில் தொழினுட்பப்பிரிவில் மிகச்சிறந்த பெறுபேறுகளை பெற்ற எமது மாணவர்களை
பாராட்டி வாழ்த்துகின்றோம்

### உயிர் முறைமைகள் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மா.நிலை | பெயர் | பெறுபேறு | மா.நிலை |
|---|---|---|---|---|---|
| ந.கிஷாந்தி | A 2B | 06 | த.வனிதா | A 2C | 31 |
| சி.ஹர்னி | 2A C | 07 | ற.அபிஷா | B 2C | 32 |
| க.ஜக்சிகா | 2A C | 08 | ப.பேபிகா | B C S | 36 |
| ந.றஜோலினி | A 2B | 12 | சி.சௌமியா | B 2C | 37 |
| த.கிருபாஜினி | A B C | 14 | க.டனுசா | 3C | 38 |
| நா.அபிசா | 2B C | 15 | வ.கபிஷாளினி | B 2C | 39 |
| ச.நிதுசா | A 2B | 17 | றெ.நிஷர்மி | 3C | 41 |
| பி. அபிராம் | B 2C | 22 | ரா. பாதுஷா | 3C | 43 |
| கே.நிதுஷா | A 2C | 29 | சி.கபிநயா | 3C | 47 |
| சி.சிந்துஜன் | B 2C | 30 | ஜெ.நிதர்ஷனா | 3C | 50 |

### பொறியியல் தொழினுட்பவியல்

| பெயர் | பெறுபேறு | மா.நிலை | பெயர் | பெறுபேறு | மா.நிலை |
|---|---|---|---|---|---|
| ச.அஜிலக்சன் | 2C S | 05 | சி.பழுராம் | A 2C | 30 |
| வி.சதுர்சன் | A B C | 07 | வி.அஜய் | 3C | 36 |
| கொ.டெல்சிகன் | 2C S | 08 | ர. பிரசாந்த் | B 2C | 37 |
| கு.திசானுஜன் | A 2B | 10 | பி.திவிஸ்ரன் | B 2C | 39 |
| யோ.வினுஜன் | 3B | 11 | அ.சாமுவேல் | 3C | 40 |
| யோ.திருசன் | A B C | 15 | வி.கம்சி | 3C | 49 |
| அ.ஜீவிந்த் | 3S | 18 | ம. சிலக்சன் | B 2C | 50 |
| ற.றிலக்சன் | 3C | 20 | அ.டினுசன் | 2C S | 54 |
| அ.லக்சன் | B 2C | 27 | மு.மாதங்கி | 3C | 58 |

A/L 2023 REPEAT BATCH ஆரம்பம் ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி
வீரசிங்கம் மண்டபம், 3ஆம் மாடி, யாழ்ப்பாணம்.
077 170 3549
(1041)

Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 269/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 175/= | |
| 1 Kg றவை | - 285/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 285/= | |
| 1 Kg மஞ்சள் பருப்பு | - 405/= | |
| 1 Kg தீட்டல் பச்சை | - 178/= | |
| 1 Kg அரிசி மா | - 205/= | |
| 1 Kg கட்டி உப்பு | - 80/= | ~~110/=~~ |
| 750ml New VSP நல்லெண்ணை | - 1450/= | ~~1550/=~~ |
| 01 Supiri மீன் ரின் | - 450/= | ~~650/=~~ |
| 1Kg Lux சன்லைட் றோஸ் பவுடர் | - 370/= | ~~450/=~~ |
| 500g Surf excel பவுடர் | - 330/= | ~~400/=~~ |
| 500ml Vim Liquid - (விம்) | - 350/= | ~~375/=~~ |
| 01L நெல்லி கோடியல் | - 400/= | ~~500/=~~ |
| 70g பேபி சோப் | - 115/= | ~~145/=~~ |
| 400g வட்டவல தேயிலை | - 999/= | ~~1140~~ |

400g Anchor
995/=

~~1050/=~~

தரமான பொருட்களைசிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு எமது Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
0777 8080 30
(1044)

# காணி விற்பனைக்கு உண்டு

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 51 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- பதினெட்டடிப் பாதை (18)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- நகர அபிவிருத்தி அதிகார சபையின் (UDA) அனுமதி பெற்றது

(குரு) 077 029 4164, 077 329 4130, 077 294 1521
(1045)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் ... பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.